★ விலை ரூபா 1-00

நியூ ஏசியன்
இன்ஸ்ரிரியூட்
(காப்புறுதிக்கூட்டுத்தாபனம்முன்பாக
615, ஆஸ்பத்திரி வீதி, யாழ்.
A/L 1983
பொருளியல் – A குமரவேல்
கணக்கியல் – கந்தசாமி
வர்த்தகம் – திலகரட்னம்
அளவையியல்– மனோகரன்
புவியியல் – சண்
தமிழ் – குமரன்
இந்துநாகரீகம்– அருள்நங்கை
துரித மீட்டல் வகுப்புகள்
ஆரம்பம்: 1-2-83
6048

# ஈழநாடு
# THE EELANADU

இலண்டன் பரீட்சைகள்
C.E.I., CITY & GUILDS
1984 மே
பல்கலைக்கழகப் பரீட்சைகள்
GAQ – 1983/1984
G.C.E O/L, A/L
(கலை, வணிகம், விஞ்ஞானம்)
ஆரம்பம்: 05-02-83
J. E. C.
33, பருத்தித்துறை வீதி,
-யாழ்ப்பாணம்.
(புகையிரதக்கடவைக்கருகில்)
6053

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)
மலர் 25 தை 19 ரபி. ஆகி 17 இதழ் 354
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 1—2—83

## பருத்தித்துறை மாவட்ட நீதிபதி இராணுவத்தினரால் அவமதிப்பு:
# ாழ். சட்டத்தரணிகள் சங்கம் ண்டனம்!

### நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதிக்கு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)
பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திரு. ரி. கே. திலகன், இராணுவத்தினரால் அவமதிப்புக்குள்ளானதுகுறித்து யாழ்ப்பாணம் சட்டத்தரணிகள் சங்கம் கண்டனத்தீர்மானமொன்றை நிறைவேற்றியுள்ளதுடன்; இதுகுறித்து சம்பந்தப்பட்ட இராணுவத்தினர்மீது உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியைக் கோரியுள்ளனர்.

யாழ்ப்பாணம் சட்டநூலகத்தில சிரேஷ்டசட்டத்தரணியும் சங்கத்தலைவருமான திரு. எஸ். ஆர். கனகநாயகம் தலைமையில் இச்சங்கம் நேற்றுக் கூடியபோதே மேற்படி தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

"பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திரு. ரி. கே. திலகன் சம்பவதினமிரவு யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறைக்குச்சென்று கொண்டிருந்தார். அப்போது அவரை வழிமறித்த இராணுவ வீரர்

8-ம் பக்கம் பார்க்க)

## வவனியா பஸ் விபத்து: இருவர் பலி; 50 பேர் காயம்

(வவனியா)
வவனியா பஸ் நிலையத்திலிருந்து நேற்று முன்தினமிரவு விளாத்திக்குளம் சென்ற இ.போ.ச. பஸ் மன்னார் வீதியில் 4ம் கட்டையில் மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் பலியானார்கள். 50 பேர் காயமடைந்தனர்.

இவ்விபத்தில் வவனியாவைச் சேர்ந்த மூர்த்தி (22 வயது) என்பவர் ஸ்தலத்தில் பலியானார் ஏழுபேர்படுகாயமடைந்த நிலையில் அநுராதபுரம்ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்லப்பட்டபோது வவனியாவைச் சேர்ந்த வேலு என்பவர் மரணமானார். 6 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

காயமடைந்த 42 பேர் வவனியா ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகின்றனர். விபத்துக்குள்ளானபஸ் சாரதிசுப்பிரமணியம் ரத்தினம், காப்பாளர் வேலுப்பிள்ளை ஆகியோரும் வவனியா ஆஸ்பத்திரியில் சிகிச்சை யளிக்கப்பட்டுவருகின்றனர். (உ)

### எரிப்பிழம்பே விழுந்தது!

(கொழும்பு
மாவத்தகமவில் கடந்த மாதம் 22ந் திகதி விழுந்த பொருள் வெறும்எரிப்பிழம்பே என்று இதனை ஆராய்ந்த அணுசக்தி விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இப்பொருள் பழுதடைந்த சோவியத் செய்மதியான 'கொஸ்மஸ் 1402' விருந்து விழவில்லையென்றும் அவர்கள் தெரிவித்தனர். (வெ)

## யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் நான்கு நாள் உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் இன்று தொடக்கம் 4-ம் திகதிவரை தொடர்ந்து உண்ணாவிரதம் இருக்கத் தீர்மானித்துள்ளனர்.

தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மத குருமார், வைத்தியர்கள், விரிவுரையாளர் தம்பதிகள், மாணவர்கள், இளைஞர்கள் சகலரையும் விடுதலை செய்யவேண்டும் அல்லது

8ம் பக்கம் பார்க்க)

## ாழ். ப. நோ. கூ. சங்க தலைமை அலுவலகத்தில் ிதலைப் புலிகளின் துண்டுப் பிரசுரம் ிநியோகம்! 'புலிகள்புலிகள்' என்றுசத்தம்

[யாழ்ப்பாணம்]
தமிழீழவிடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் வெளியிட்டதாகக் கருதப்படும் துண்டுப்பிரசுரங்களை, யாழ். மாநகர பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தலைமைக் காரியாலயத்தில் நேற்றுக் காலை இளைஞர் கோஷ்டியொன்று விநியோகித்தது.

நான்கு இளைஞர்கள் ஒரு பார்சலுடன் கீழே நிற்க ஒரு இளைஞர் மேல்மாடிக்குச் சென்று, பொதுமுகாமையாளர் களஞ்சியப் பொறுப்பாளர் உட்பட சகல ஊழியர்களுக்கும் துண்டுப் பிரசுரங்களை வழங்கினர்.

இதன்பின்னர் கீழே வரும் வழியில் ஊழியர் ஒருவருக்கு துண்டுப்பிரசுரம் வழங்கும் போது அவர் கேள்வி எழுப்பியதாகவும் இளைஞர்கள் அங்கிருந்து சென்றதும் ஊழியர்கள் "புலிகள் புலிகள்" என்று குளறியதாகவும் கூறப்படுகிறது.

துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கும் இரு தனியார் நிலையங்களுக்கும் இளைஞர்கள் சென்று துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தனர்.

துண்டுப்பிரசுரங்களைப் பெற்றுக்கொண்ட யாழ். மாநகர பல நோக்குக்கூட்டுறவு ஊழியர்கள் இதுபற்றி புகார் செய்ததைத் தொடர்ந்து யாழ். பொலிசார் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். [மா–க]

## ஜாதிக சம்பத சுவீப் முடிவு

(கொழும்பு)
கொழும்பில் நேற்று இழுக்கப்பட்ட மகாஜன சம்பத சுவீப்பின் முதல் மூன்று முடிவுகளும் வருமாறு:

முதலாவது பரிசு
05 F 0665
ரூ. 2,75,100

இரண்டாவது பரிசு
20 F 0808
ரூ. 1,37,550

மூன்றாவது பரிசு
15 X 0334
ரூ. 45,850

MASTER INSTITUTES
B. M. C. லேன், யாழ்ப்பாணம்.
இன்று ஆரம்பம்
பகல் நேர வகுப்பு 4-ம் பிரிவு
இரசாயனம் - ஜெகன்
பௌதிகம் - வர்ணம்
தாவரவியல் - ரவிகுமார்
விலங்கியல் - நாகநாதன்
தூய, பிரயோககணிதம் - கிருஷ்ணா
(6038)

## 'மாவட்ட அமைச்சர் பதவி: கடைசிவரை ஏற்கமாட்டேன்'
### உடுப்பிட்டி விழாவில் 'சிவா' அறிவிப்பு

(கரவெட்டி நிருபர் எம். சுபேந்திரன்)
மாவட்ட அமைச்சர் பதவியையோ அல்லது வேறு எந்தப் பதவியையுமோ தான் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்று தமிழர்விடுதலைக் கூட்டணித் தலைவரும், நல்லூர் எம்.பியுமான திரு. எம். சிவசிதம்பரம் அறிவித்துள்ளார்.

உடுப்பிட்டி இலகடியில் நிறுவப்பட்டுள்ள இராசலிங்கம் சனசமூகநிலையத் திறப்பு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். திரு. ச. ஜெயக்கொடி தலைமையில் நடந்த இத் திறப்பு விழாவில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. சிவசிதம்பரம் மேலும் கூறியதாவது:

(8-ம் பக்கம் பார்க்க!

# வரிவிளம்பரம்

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், அத்தியடி அம்பலவாணர் வீதியில் உள்ள இரண்டு பரப்பு காணி சகல வசதிகளுடன் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ளவும் P. திவ்வியநாதன், 73, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். 6034

## பயிற்சி

றேடியோ – டெலிவிஷன் ஏயர் கொண்டிசனிங், எலக்றிக்கல் வயறிங், எலக்றிக்கல் றீவைண்டிங், மோட்டமெக்கானிசம், வெல்டிங் பயிற்சிகள் ஆரம்பம் 09-02-83 விபரம் நேரில். (The School of Computer Studies) 52/1. கனகரத்தினம் கட்டிடம் (வீனஸ் மேல்மாடி) ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 6035

## தேவை

தனியார்துறையில் கணக்குப் பதிவில் அனுபவமுள்ள ஓர் கணக்குப்]பதிவாளர்/எழுதுவினைஞர் உடனடியாகத் தேவை. முழு விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 6045, C/O ஈழநாடு, யாழ்ப்பாணம். 6045

## வகுப்புக்கள்

Scientific Cutting, Hair Styles, Cake Making and Icing, Short Eats, Flower Making ஆகியவற்றிற்கு வகுப்புக்கள் நடைபெறுகின்றன. சேர விரும்புவோர் சனி, ஞாயிறு நாட்களில் தொடர்புகொள்ளவும். இல. 27, 3ம் ஒழுங்கை (எஸ். பி சாமி அன் கோ அருகாமையில்) மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 6025

## WANTED

Wanted Computer Instructor for a Reputed Academy in Jaffna. Apply Before 3-rd Instant. Advt. No: 6039, C/O Eelanadu, Jaffna. 6039


தோட்ட குத்தகைப் பிரச்னை

# இ. தொ. கா. கோரிக்கைக்கு ஜனாதிபதி இணக்கம்

## ல. தோ. அ. நிறுவனத்துக்கு செல்லச்சாமி நியமனம்

(கொழும்பு)

தனிப்பட்ட நபர்களுக்குத் தோட்டங்கள் குத்தகைக்கு விடப்படமாட்டாது. கம்பனிகளுக்கு மாத்திரமே தோட்டங்கள் குத்தகைக்கு விடப்படும்.

அண்மையில் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவைச் சந்தித்துப் பேசிய தொழிற்சங்கப் பிரதிநிதிகள் பிரமுகர்கள் குழுவொன்றிடம் இந்த உறுதிமொழி தெரிவிக்கப்பட்டது.

முன்பு ஜனதா தோட்ட அபிவிருத்திசபையின் நிர்வாகத்திலிருந்து பல தோட்டங்கள் புதிதாக அமைக்கப்பட்ட லங்கா அபிவிருத்தி நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டன, 47,000 ஏக்கர் பரப்புக் கொண்ட 45 தோட்டங்கள் இதில் அடங்கும்.

தனிப்பட்ட நபர்களுக்கு இத்தோட்டங்கள் குத்தகைக்கு விடப்படுவதனை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கடுமையாக எதிர்த்து வந்தது. இதன் காரணமாக ஜனாதிபதி ஒரு மகாநாட்டை அமைத்திருந்தார். சில தினங்களுக்குமுன் இந்த மகாநாடு நடைபெற்றது. கம்பனிகளுக்கு மாத்திரமே தோட்டங்கள் குத்தகைக்கு விடப்படவேண்டும் என்றும். இவை ஏற்கனவே உள்ள தொழிலாளர்களதும் ஊழியர்களதும் வேலை நிலைமைகளை மாற்றலாகாதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. எம். எஸ். செல்லச்சாமியை ஜனாதிபதி லங்கா தோட்ட அபிவிருத்தி நிறுவனத்தின் பணிப்பாளர் சபைக்கு நியமித்தார்.

இந்த மகாநாட்டில் இ. தொ. கா. பொதுச்செயலாளர் எம். எஸ். செல்லச்சாமி தொழில் உறவுப் பணிப்பாளர் திரு. எஸ். ரெங்கநாதன், வெளியுறவு அதிகாரி திரு ஏ. மகாகிருஷ்ணன், சிறீ லங்கா அரசு தோட்டக் கூட்டுத் தாபனத் தலைவர் திரு. கே. ஜே. ரத்வத்த, தோட்ட அபிவிருத்திசபைத் தலைவர் திரு. பேப்சித் செனவிரத்ன, ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் திரு. கி. ஏ. எஸ், மரிக்கார், லங்கா தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கப்பொதுச் செயலாளர் திரு. ராஜா செனிவிரட்ண ஆகியோர் இந்த நிகழ்ச்சியில் பங்குகொண்டனர்.

## சீனியின்றி தேனீர்

(மன்னார்)

மன்னார் பகுதியில் சீனிக்குப் பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் இங்குள்ள ஹோட்டல்களிலும், தேனீர்ச்சாலைகளிலும் சீனியில்லாத தேனீரும், பால் தேனீருமே விற்பனைசெய்யப்பட்டுவருகிறது.

இதனால் தேனீர் விற்பனை வீழ்ச்சியடைந்துள்ளது. (க)

## குற்றச் செயல் அதிகரிப்பு

[மன்னார்]

மன்னார் பகுதியில் 1981ம் ஆண்டைவிட 1982ஆம் ஆண்டில் குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளதாக மன்னார் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

மன்னார் பகுதியில் 1981ஆம் ஆண்டு, 223 குற்றச்செயல்களும், 1982ஆம் ஆண்டு 382 குற்றச்செயல்களும் இடம் பெற்றுள்ளன, [க]

# இன்றைய பலன்

தை மாதம் 19-ந் திகதி
செவ்வாய்க்கிழமை
(1—2—83)

மேடம்: ஏக்கத்தின் சாயல் தாக்கும். எதிர்பாராதவிதமாக சிக்கல்களில் மாட்டிக்கொள்ள நேரிடும். உள்ளக் கிடக்கைகளை எவரிடமும் சொல்லாதிருக்கவும்.

இடபம்: நீண்டநாள் கனவு இன்று நனவாகும். பெரியவர்கள் இன்று உதவிக்கு வருவர். புண்ணிய விருப்பு மேலிடும். இன்று விருந்து உபசாரம் மகிழ்ச்சியைத்தரும்.

மிதுனம்: புதுமையான எண்ணங்கள் தலைதூக்கும். தொழில் துறையில் புதிய சாதனை உருவாகும். கல்விகற்றவர்களால் ஆதரவு தப்பாமல் கிடைக்கும்,

கடகம்: புதிய தொழில்கள் மூலம் இலாபம் கிடைக்கும், புத்திரர்களுடைய செல்வாக்குப் பெருகும். புதுமையான தொழில் மனதில் வட்டமிடும். முன்னேற்றமான தினம்.

சிங்கம்: அற்ப விடயத்திற்குக்கூட ஆத்திரமடைவீர்கள். நெருங்கிய நண்பர் ஒருவரை பகைத்துக்கொள்ள நேரிடும். அடக்கம் வேண்டும்.

கன்னி: அதிக ஆசையினால் அவஸ்தைப்படுவீர்கள். சிலர் வழக்கு விவகாரங்களில் மாட்டிக் கொள்ளலாம் சிலரின் குறுக்கு வழித் தலையீடு உங்கள் கோபத்தை கிளறிவிடும்.

துலாம்: வார்த்தை ஜாலம் செய்வதன்மூலம் மற்றவர்களை வசீகரிப்பீர்கள். எழுத்தாளர்களுக்குச் சிறப்பான தினம். இருக்கும் இடத்தில் ஆதரவு பெருகும்.

விருச்சிகம்: அலை மோதும் மனத்துடன் அமைதிகுன்று... வலை வீசும் எதிரிகளும் ... திருப்பார்கள். சகோதர... யால் மனதில் சஞ்சலப்ப...கள்.

தனு: வாகனம் ... வோர் வாழ்வில் இ... றித்திருநாள், எதிலு... டம் உங்கள் பக்கம் ... வெளியிடத் தொடர்... கிடைக்கும்.

மகரம்: மகிழ்ச்சி... செய்தி ஒன்று கி... பிரிந்தவர் வாழ்வில் ... இணைவார்கள் குடுப... உறவு நெருங்கியதா...கும். பொன்னான தின...

கும்பம்: சமூகப் ப... உங்களை வட்டமிடும் ...திரிகள் சதி செய்யக் காத்திருப்பார்கள். ஆயுத பீடையில் இடமளிக்க நேரிடும். எதிலும் அவதானம் வேண்டும்.

மீனம்: காதல் விவகாரங்கள் தலைதூக்கும். இனிமையான எண்ணங்கள் நடைபெறும். களஸ்திரவழியால் புகழுண்டு. பெரியோர் ஆதரவு உண்டு.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை.

★ வவனியா பகுதியில்

# உருளைக்கிழங்கு உற்பத்தி சிறந்த விளைவைப்பெறலாம்

[வவனியா]

குளிர் காலத்தில் வவனியா பகுதியில் உருளைக்கிழங்கு பயிரிட்டால் சிறந்த விளைவைப் பெறலாம் எனப் பேராதனை விவசாயப் பகுதி அத்தியட்சகர் கலாநிதி வோல்டர் பெர்னாண்டோ கருத்து வெளியிட்டுள்ளார்.

வவனியா நகரசபை மண்டபத்தில் நடந்த விவசாயவிழா வைபவம் ஒன்றில் இதனை தெரிவித்தார்.

வவனியா விவசாய திணைக்களமும் வவனியா குளோப் வர்த்தக நிறுவனமும் இணைந்து இந்த வைபவத்தை ஏற்பாடு செய்திருந்தது.

வவனியா உதவி விவசாயப்பணிப்பாளர் திரு. ரி. பத்மநாதன் தலைமையில் நடந்த இந்த வைபவத்துக்கு விவசாய பிரதி பணிப்பாளர்கள் திரு. பேர்ஸி அபயவர்தன, திரு. எஸ். நடேச... கலாநிதிரணவீரா, வடப... விவசாய அதிகார சபை...வர் திரு. ரூபசிங்கம், ...நொச்சி விவசாயப்... ஆராய்ச்சி அதிகாரி கல... லூயிஸ் சுப்பிரமணி... யாழ். விவசாயபகுதி அதி... திரு ஜெயரட்ணம். மன்... விவசாயப்பகுதி அதிகாரி திரு. ஜேம்ஸ் பத்திநாதர் உட்பட யாழ், மன்னார், வவனியா, கிளிநொச்சி பகுதிகளைச் சேர்ந்த பல விவசாய இலாகா உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

சிறுதானியங்கள் பயிரிடல், கூடிய விளைவு தரக்கூடிய வகையில் பயிர்களை எந்த முறையில் பயிரிடலாம் போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டது.


# நீர்ப்பாசன திணைக்களம்

## முத்துஐயன் கட்டுப் பகுதி

கிளிநொச்சிப் பிராந்திய நீர்ப்பாசனப் பிரதிப் பணிப்பாளர் பணிமனையின் கேள்விப்பத்திர சபையின் தலைவரினால், கேள்விப் பத்திரங்கள் நீர்ப்பாசன திணைக்களத்தில் பதிவு செய்துள்ள ஒப்பந்தகாரரிடம் இருந்து, முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கீழ்க்காணும் வேலைகளுக்கு 1983-2-17ம் திகதி மு. ப. 10-00 மணிக்கு முன்பாகக் கிடைக்கக்கூடியதாகக் கோரப்படுகின்றன.

| வேலையின் பெயர் | ஒப்பந்தகாரர் பதிவு செய்யப்பட்டிருக்கவேண்டிய ஆகக்குறைந்த தொகை |
|---|---|
| 1. வாவெட்டிக்குளம் புனரமைப்பு | ரூ. 125,000/- |
| 2. ஒதியமலைக்குளம் புனரமைப்பு | ரூ. 150,000/- |

இவ்வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்களை 1983-01-25 தொடக்கம் 1983-02-15 வரை முத்துஐயன் கட்டுப் பகுதி நீர்ப்பாசனப் பொறியியலாளர் காரியாலயத்தில் இருந்து ஒவ்வொன்றுக்கும் வைப்புப் பணமாக ரூபா 250/- செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

இது சம்பந்தமான வேறு விபரங்கள் தேவைப்படின் முத்துஐயன் கட்டு நீர்ப்பாசனப் பொறியியலாளர் காரியாலயத்திலிருந்து பெற்றுக்கொள்ளவும்.

இ அருமைநாயகம்
நீர்ப்பாசனப் பொறியியலாளர்
முத்துஐயன் கட்டுப்பகுதி

நீர்ப்பாசனக் காரியாலயம்,
ஒட்டுசுட்டான்.
1983-01-25

6007


## றேடியோவுடன் பாலும் திருட்டு

(கரவெட்டி)

வீடொன்றில் குகினிப்பக்கமாக யன்னல் உடைத்து நடந்த திருட்டில் அந்த வீட்டின் குளிர் சாதனப் பெட்டியில் போத்தல் ஒன்றில் வைக்கப்பட்டிருந்தபாலும் திருட்டுப்போயுள்ளது.

கட்டைவேலி நெல்லியடிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க எரிபொருள் விற்பனவு நிலையத்திற்கு அருகாமையிலுள்ள மாடி வீட்டில் இரவுவேளை நடந்துள்ள இத் திருட்டுச் சம்பவத்தில் வானொலிப் பெட்டி ஒன்றும் களவாடப்பட்டு இருந்தது.

இச்சம்பவம் பற்றி பருத்தித்துறைப் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது [அ]

தலைமன்னார் துறைமுக பகுதியில்

# 100 ரூபா கள்ளநோட்டு கண்டுபிடி... இந்தியபிரயாணிகள் மூவர் விசாரணை

[மன்னார்]

தலைமன்னார்துறைமுக பகுதியில் மூன்று 100 ரூபா கள்ள நோட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து 3 இந்திய பிரயாணிகள் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

இச் சம்பவத்தைத்தொடர்ந்து தலைமன்னார் ராமேஸ்வரம் கப்பல் மார்க்கமாக பயணம் செய்யும், பிரயாணிகள் மிகவும் கவனமாக இருக்கவேண்டுமென தலைமன்னார்துறைமுக அதிகாரிகள் ஒலிபெருக்குமூலம் அறிவித்துவிடுகின்றனர். அத்துடன் வங்கி கிளையில் கடமையாற்றும் ஊழியரும், கவனமாக நோட்டுக்களை பரிசோதிக்க வேண்டும் என இலங்கை வங்கிக்கிளை முகாமையாளராக் கேட்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம்பற்றி கூ... படுவதாவது:

கப்பல் மார்க்கமாக ... மன்னார் துறைமுகத்தை வ...டைந்த 3 இந்தியப்பிரய...களின் பொருட்களுக்கு ... பகுதியினரால் தீர்வை ...கப்பட்டது.

தீர்வைப்பணத்தைச் ...துவதற்குப் பணமி... இந்தியப் பிரயாணி...மிடமிருந்த பொ... சிலவற்றை நடைப...பாரிகளுக்கு விற்பனை ... தீர்வையாக விதிக்கப்ப... பணத்தைச் செலுத்தி... இவ்வாறு நடைபாதை ... பாரிகளிடமிருந்து பெ...

7-ம் பக்கம் பார்க்க


மீண்டும் தொலைக்காட்சியில் 'மட்ரூஸ்' நிகழ்ச்சிகள் தெளிவாகத் தெரிய ஆரம்பித்துள்ளதால்

உத்தரவாதத்துடன் 'மட்ரூஸ்' ஏரியலை உடன் பொருத்திக்கொள்ள

வீனஸ் 266/1 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

நியூ வீனஸ் 79/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# அரச பதவி வெற்றிடங்கள்

## கிராமசேவக உத்தியோகத்தர்

"கிராமசேவக உத்தியோகத்தர் (தமிழ் மொழிமூலம்) தரம் IIக்கான விண்ணப்பங்கள் பின்வரும் மாவட்டங்களில் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரி குறிப்பிட்ட மாவட்டங்களில் குறைந்தது 3 வருடமாவது நிரந்தரமாக வசித்திருக்க வேண்டும். தகுதி கா. பொ. தா. சாதாரணம், தே. பொ கல்வி (சாதாரணம்) என்பவற்றில் சித்தி பெற்றிருக்க வேண்டும். வயதெல்லை 21 தொடக்கம் 40 வரையாகும். விண்ணப்பிக்க கடைசித் திகதி வருகிற 22-02-83 ஆகும். விபரங்களுக்கு 21-01-83 வர்த்தமானி பார்க்கவும்.

| மாவட்டம் | வெற்றிடங்கள் |
|---|---|
| கண்டி | 07 |
| களுத்துறை | 03 |
| மாத்தளை | 01 |
| நுவரெலியா | 58 |
| பதுளை | 12 |
| இரத்தினபுரி | 02 |
| கேகாலை | 08 |

## கமத்தொழில் திணைக்களம்

கமத்தொழில் திணைக்களத்தில் கமத்தொழில் விரிவாக்க ஊழியர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரி க. பொ. த. (சாதாரணம்) பரீட்சையில் 5 பாடங்கள் அல்லது தே. க. பொ. த. பரீட்சையில் 6 பாடங்களில் சித்தியும், 19க்கும் 40க்கும் இடைப்பட்ட வயதினை உடையவராகவும் இருக்க வேண்டும். விண்ணப்பிப்பதற்கான கடைசித் திகதி வருகிற 28-02-83 ஆகும். விபரங்கட்கு 21-01-83 வர்த்தமானி பார்க்கவும்.

## சாரதி பதவி

குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தில் 'ஜீப்' வண்டி சாரதிக்கான விண்ணப்பங்கள் இலங்கைப் பிரஜையிடம் இருந்து கோரப்படுகின்றன. விண்ணப்பதாரி 5-ம் வகுப்பில் சித்தி பெற்றிருக்க வேண்டும். வயதெல்லை 21 தொடக்கம் 45 வரையாகும். விண்ணப்பங்கள் அனுப்புவதற்கான கடைசித்திகதி வருகிற 31-01-83 ஆகும். விபரங்கட்கு 21-01-83 வர்த்தமானி பார்க்கவும்.

# வவனியாவில் கருத்தடை சிகிச்சை வெற்றியளித்தாலும், "வெளியாரின் வருகையால் ஜனத்தொகை அதிகரிப்பு

## அரசாங்க அதிபர் தகவல்

(வவனியா)

வவனியா மாவட்டத்தில் நிரந்தர கருத்தடை சத்திர சிகிச்சை செய்யப்படுவோர் நூற்றுக்கணக்காக இருந்த போதும் மற்றைய பகுதிகளை விட இங்கு சனத்தொகை கூடியுள்ளது. வெளி மாவட்டத்திலிருந்து குடிபெயர்ந்து இங்கு வருவோரின் தொகை அதிகரிப்பே இதற்குக் காரணமாகும்.

வவனியா அரசாங்க அதிபர் திரு. கே சி. லோகேஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வவனியா கச்சேரியில் சமூக சேவைகட்டிடத்தில் இலங்கை குடும்பத்திட்ட சங்க வவனியா கிளைக்கான காரியாலயத்தினைத் திறந்து வைத்து அங்கு பேசுகையிலேயே அரசாங்க அதிபர் மேற்கண்டவாறு கூறினார்.

வவனியா மாவட்ட மேற்படி சங்கத் தலைவர் டாக்டர் ஐ. ஞானேஸ்வரன் தலைமையில் இந்த வைபவம் நடைபெற்றது.

இங்கு வவனியா மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சோ. நிரஞ்சன், திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் திரு. எஸ். இலங்காநேசன், வவனியா மாவட்ட பதில் நீதிபதி திரு ஆர். வில்வராஜா, குடும்பத்திட்டச்சங்கச் செயலாக்கு முகாமையாளர் திரு. எஸ்.கலா பரமேஸ்வரன் ஆகியோரும் பேசினார்கள்.

பெருமளவு குடும்ப நலத் தொண்டர்கள், வவனியாவிலுள்ள பல திணைக்களத் தலைவர்கள் சமூகமளித்திருந்தனர். இதற்கான சகல ஏற்பாடுகளையும் இங்குள்ள குடும்பநலத் திட்டமிடல் அதிகாரி திரு. எஸ். ஜெகதீஸ்வரன் செய்துள்ளார்.

இறுதியில் மாவட்ட குடும்ப நலச் செயலாளர் திரு. ஜி. நடேசபிள்ளை நன்றியுரை கூறினார். (க)

# சந்தேகநபர் றிமாண்டில்!

(மாவிட்டபுரம்)

இரவு நேரம் வீட்டினுள் புகுந்து திருடமுயன்ற சமயம் பிடிபட்டுக்கொண்ட சந்தேக நபர் றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்.

அராலி தெற்கில் பி. புவனேந்திரன் என்பவரது வீட்டினுள் இரவு நேரம் புகுந்த தேவானந்தம் செல்வேஸ்வரன் என்னும் நபர் அங்கு திருட முயன்ற சமயம் வீட்டுக்காரர் விழித்துக்கொண்டு கூக்குரல் எழுப்பவே அங்குகூடிய பொதுமக்களால் இந்நபர் பிடிக்கப்பட்டார்.

காங்கேசன்துறைப் பொலிஸில் இந்நபர் ஒப்படைக்கப்பட்டதையடுத்து பொலிஸார் இவரை விசாரணை செய்தபின் யாழ். நீதவான் திரு. வி. ஜெகசோதிமுன் ஆஜர்செய்தசமயம் றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிடப்பட்டது.

# வெளிநாடுசெல்ல பணம் கிடைக்காததினால் தற்கொலை

(மாவிட்டபுரம்)

வெளிநாடு செல்ல ஆசைப்பட்ட வாலிபர் அதற்கு பெருந்தொகை பணம் இல்லையென தந்தை கூறியதால் நஞ்சருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

தெல்லிப்பழையில் நடந்த இச்சம்பவத்தில் இறந்தவர் முருகையா வெற்றி வேலாயுதம் என்னும் 19 வயது வாலிபர் ஆவார்.

கூலிவேலை செய்து வந்த மேற்படி வாலிபர் வெளிநாடு சென்று பணம் சம்பாதிக்க ஆசைப்பட்டு தந்தையிடம் வெளிநாடு செல்ல பணம் தருமாறு கேட்டதாகவும், பெருந்தொகை பணத்திற்கு எங்கே போவது? என தந்தை கூறியதால் மனமுடைந்த இவர் நஞ்சருந்தியதாக விசாரணையில் தெரியவந்தது. காலமானவரின் தந்தை கார்த்திகேசு முருகையாவும் மற்றும் சிலரும் சாட்சியமளித்தனர்.

திடீர் மரண விசாரணை அதிகாரி திரு நா. தம்பிராஜா இம்மரணம் குறித்து விசாரணை நடாத்திதற்கொலை என தீர்ப்பளித்தார்.

காங்கேசன்துறைப்பொலிஸ் கான்ஸ்டபிள் திரு. வ. தங்கவேல் விசாரணைக்கான ஏற்பாடுகளை செய்திருந்தார். (ஊ)

# "ஐக்கியத்தை வளர்ப்பதில் சனசமூக நிலையங்கள்"

(விஸ்வமடு)

"சன சமூக நிலையங்கள் கிராமிய மக்களின் அறிவை வளர்க்கவும், மக்களிடையே உள்ள வேறுபாடுகளைக்களைந்து ஐக்கியத்தை ஏற்படுத்தவும் பெரிதும் உதவுகின்றன"

இவ்வாறு முல்லைத்தீவு மாவட்ட சன சமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. எஸ். சுவாம்பிள்ளை முடியப்பு முல்லைத்தீவு அபிவிருத்திச்சபை பொதுசன நூலகத்தில் நடைபெற்ற சன சமூக நிலையங்களின் ஒன்றியத்தின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போது தெரிவித்தார்.

மேலும் அவர் பேசும்போது முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள சன சமூக நிலையங்கள் நாற்பத்தி எட்டிலும் மிகக் கூடுதலானவை ஆரம்ப நிலையில் வளரவழியில்லாது வளர்ப்பதற்கு வழிகாட்டி இல்லாது இருப்பதையிட்டு நானமிகவும் வேதனையடைகிறேன். தனியே நான் மட்டும் முழுபகுதியிலும் உள்ள சன சமூக நிலையங்களை விரைவுடன் வளர்த்தெடுக்க முடியாது. அவ்வாறான வளர்ச்சிகளை என்னோடு சேர்த்து இந்த ஒன்றியமும் பங்காற்ற வேண்டும். இதன்மூலம் தனி ஒருபகுதி மட்டும் வளராது பல பகுதிகளிலும் இதன் பணி பரிணமிக்கவேண்டும். அதன் மூலம் சமூகத்தின் அறிவு வளர்ச்சியும் மக்களிடையே அமைதியும் சமாதானமும் ஒற்றுமையும் ஏற்பட வழிபாகும் என்று குறிப்பிட்டார்.

தொடர்ந்து உள்ளூராட்சி திணைக்கள ஆய்வு உத்தியோகத்தர் திரு. வ. கிருஷ்ணசாமி பேசுகையில் எமது அரசு மேலும் இப்பகுதியில் ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் ஒவ்வொரு சன சமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தரை நியமிக்க முடிவுசெய்துள்ளது. அதன் பின் அவர்களுடன் ... அபிவிருத்தி அமைக்க இந்தப் புது ஒன்றியமும் அவசியமாயிருப்பது யாவற்றிற்கும் இலகுவானது என்று அவர் குறிப்பிட்டார் இதைத்தொடர்ந்து சமாஜத்தின் புதிய நிர்வாக சபை தெரிவுசெய்யப்பட்ட சமயம் ஒன்றியத்தின் போசகராக திரு. சுவாம்பிள்ளை முடியப்பு தெரிவுசெய்யப்பட்டார்.

தலைவராக திரு. ஜி. எஸ். அன்ரன் பிறிற்றோ, உபதலைவராக திரு. எஸ் சிவசுப்பிரமணியம், செயலாளராக திரு. கே. எஸ். கே. ஆறுமுகம், உபசெயலாளராக ஜனாப் எஸ் முகமட், பொருளாளராக திரு. த. மகாலிங்கம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். செயற்குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

# 'புத்தொளி'க்கு பரிசு

[மானிப்பாய்]

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் நடத்திய சிறந்த நேயர் ஆய்வுக் கட்டுரைப் பரிசு எழுத்தாளரும் வெளியீட்டாளருமான ஆனைக்கோட்டை அ. மி. த. க. பாடசாலை ஆசிரியர் 'புத்தொளி' ந. சிவபாதத்திற்குக் கிடைத்துள்ளது.

இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம் 1982 ஜனவரி மாதம் முழுவதும் ஒலிபரப்பாகும் வானொலி நிகழ்ச்சிகளைக் கேட்டு அந்நிகழ்ச்சிகளைபற்றிய சிறந்த நேயர் ஆய்வுக் கட்டுரைக்குப் பரிசு வழங்கப்படுமென அறிவித்திருந்தது.

பல ஆயிரக்கணக்கான நேயர்கள் சிங்களம், தமிழ், ஆங்கில நிகழ்ச்சிகளைக் கேட்டு ஆய்வுக் கட்டுரைகளை அனுப்பியிருந்தார்கள். ஒவ்வொரு மொழிக்கும் மூவர்கொண்ட தெரிவுக் குழுவினர் நியமிக்கப்பட்டு அந்தந்த மொழியில் சிறந்த கட்டுரைகளைத் தெரிவு செய்தனர்.

கொழும்பில் நடைபெறும் பரிசளிப்பு வைபவத்தில் திரு சிவபாதத்தின் கட்டுரைக்குரிய பரிசாக வானொலிப் பெட்டி ஒன்று கிடைக்கவிருக்கின்றது. (அ)

# குடும்பத் தகராறு மனைவிதற்கொலை!

(மன்னார்)

குடும்பத் தகராறு காரணமாக விரக்தியடைந்த இளம் மனைவி கிருமிநாசினி அருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

மன்னார் பெரியமடு கிராமத்தைச் சேர்ந்த ஏ. ஹபீபா உம்மா என்பவரே தற்கொலை செய்துகொண்டவராவார்.

இவரது மரணம் தொடர்பாக மரணவிசாரணை நடத்திய மரணவிசாரணை அதிகாரி தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

# பாராட்டுவிழா ஏற்பாடுகள்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு கிராமோதய தலைவியாகவும், வலிமேற்கு பிரதேச சபைத்தலைவியாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ள திருமதி பேளி அத்தனாசியாருக்கு பண்டத்தரிப்பு பரிஷ் பொது மக்கள் சார்பில் நடாத்தப்படும் பாராட்டு விழா எதிர்வரும் 6ம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இளைப்பாறிய அதிபர் திரு வே. செல்லத்துரை தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் எதிர்க்கட்சித்தலைவர் திரு அ. அமிர்தலிங்கம், யாழ் எம்.பி திரு வி.யோகேஸ்வரன், மானிப்பாய் தொகுதி எம்.பி திரு மு. ஆலாலசுந்தரம், யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு தேவநேசன் நேசையா, யாழ் மாவட்ட அபிவிருத்திச்சபைத் தலைவர் திரு சு. நடராஜா, திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம் ஆகியோர் உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டு உரையாற்றுவார்கள்.

# 25 சதம் கொள்ளைலாபம்; ஆயிரம் ரூபா அபராதம்!

[மன்னார்]

சீனிவிற்பனையில் 25 சதம் கொள்ளை லாபம் பெற்ற வர்த்தகர் ஒருவர் ஆயிரம் ரூபாவை அபராதமாகச் செலுத்தினர்.

மன்னார் பட்டினத்தைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் 6 ரூபா 25 சதமாக விற்பனை செய்யப்படவேண்டிய 500 கிராம் சீனியை 6 ரூபா 50சதமாக விற்பனைசெய்தாரென மன்னார் விலைக்கட்டுப்பாட்டதிகாரி ஜனாப் எம். ஏ. சி. எம். ஜதீன் மன்னார் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்திருந்தார்.

இவ்வழக்கை கடந்ததிங்கட்கிழமை விசாரணை செய்த மன்னார் நீதவான் கொள்ளை லாபம் பெற்ற வர்த்தகருக்கு ஆயிரம்ரூபா அபராதம் விதித்தார்.

# பாலஸ் தாபனம்

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை மூத்தநயினார் கோவில் பாலஸ் தாபன கும்பாபிஷேகம் நாளை புதன் கிழமை பகல் மேடலக்ன சுப வேளையில் நடைபெறும்.

பாலஸ் தாபனத்தைத் தொடர்ந்து ஜீர்ணோத்தாரணப்பணி வேலைகள் நடைபெறும். (ப)

# நீர் இறைக்கும் யந்திரம் திருட்டு

(மாவிட்டபுரம்)

தோட்டத்தில் இணைக்கப்பட்டிருந்த பெறுமதிவாய்ந்த நீர் இறைக்கும் மோட்டர் இனந்தெரியாதவர்களால் திருடப்பட்டுள்ளது.

அராலி தெற்கில் இராஜபத்திரம் வைத்திலிங்கம் என்பவருக்கு சொந்தமான மோட்டரே இவ்வாறு திருடப்பட்டுள்ளது.

தோட்டத்திற்கு நீர் இறைப்பதற்காகஇணைக்கப்பட்டிருந்த இந்த மோட்டர் தோட்டத்திலேயே இருப்பது வழக்கமென்றும்முதல்நாள் இறைத்துவிட்டு மறுநாள் சென்றசமயம் மோட்டர் அங்கு இருக்கவில்லையெனவும் தெரிவிக்கப்பட்டது.

காங்கேசன்துறைப் பொலிசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

# கிறீஸ்தவ ஐக்கிய சங்க நிர்வாகிகள்

[அரியாலை]

யாழ்ப்பாணம் கிறிஸ்தவ ஐக்கிய வருடாந்தக் கூட்டம் யாழ். ரிம்பர் மண்டபத்தில் சங்க உப தலைவர் யே. ஜீ. அரசரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

செயலாளர் பொருளாளர் ஆகியோரின் வருடாந்த அறிக்கைகளைத் தொடர்ந்து புதிய வருட நிர்வாகிகள் தெரிவு நடைபெற்றது. தலைவராக திரு. யே. ஜீ. அரசரத்தினமும், உபதலைவர்களாக அருட்திரு சாம் தம்பு அடிகளாரும், திரு. சாம். எஸ். சதாசீலனும், பொதுச் செயலாளராக அருட்திரு எஸ். சுகுணானந்தன் அடிகளாரும், உப செயலாளராக அருட்திரு யே. சர்வானந்தன் அடிகளாரும், பொருளாளராக திரு. டபிள்யூ. ஜி. அன்னப்பாவும், 12 நிர்வாக சபை உறுப்பினர்களும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

### மணிவாக்கு

வருமானத்தைவிடக் குறைந்த செலவு செய்ய அறிந்துவிட்டால் ரசவாத ரகசியத்தை அடைந்து விட்டவர் ஆவோம்.

— பிராங்கிளின்

## நமது நோக்கு

# லொத்தர் உலகம்

திடீர் கோடீஸ்வரனாக - புதுப் பணக்காரன் அல்ல - வருவதற்கு இலங்கையைப் போல் வேறெந்த நாட்டையும் காணலாமோவென்பது சந்தேகம். 'லாட்டரி அடிக்கும் கூட்டம் உச்சக்கட்டத்தை அடைகிறது இதன் விளைவெனலாம்.

புதுப் பணக்காரருக்கு இன்று பல நாடுகளில் வாய்ப்புண்டு. திறந்த பொருளாதாரக் கொள்கையில் அதிக நம்பிக்கை கொண்ட சுதந்திர நாடுகள் பல இந்த வாய்ப்பை அளிப்பது எவ்வகையிலும் விரும்பத்தகாததென்று அடித்துக் கூறமுடியாது; எங்கள் நாட்டில் இது வெற்றியளிக்கிறதாவென்பது வேறுவிடயம்.

நாமிங்கு கவலைகொண்டிருப்பது உடனடியாகக் கோடீஸ்வரர்களாக அல்லது லட்சாதிபதிகளாக வரவேண்டுமென்று ஆசை கொண்டிருக்கும் பித்தர்களைப் பற்றியே!

எந்த வறியவருக்கும் இந்த ஆசை இருப்பது இயற்கை; ஆனால் இந்த விருப்பத்தைச்செயற்படுத்த வேண்டியவழி கடினஉழைப்பென்பதை மறப்பிக்க இந்நாட்டில் இடம்பெற்றுள்ள பல்வேறு லொத்தர் திட்டங்கள் நல்ல சான்றேயாகும்.

தினசரி சோதிடம் பார்ப்பவர்களும், ஏதேனுமொரு சுவீப் எப்போதாவது விழும் என்று நம்பி வாழும் கூட்டமும் மிக வேகமாக அதிகரிப்பதை நாம் பார்க்க முடிகிறது. நாட்டைப் பிடித்திருக்கும் பேய் இது.

''கடினமாக உழைத்து உண்'' என்ற வேத வாக்கியத்துக்கு இக்காலத்தில் இங்கு என்ன மதிப்புண்டு?

மாதம் இரண்டாயிரம் ரூபா சம்பளம் அல்லது வருமானம் பெற்றாலுமே ஒரு நடுத்தர குடும்பத்துக்கு சீவியத்தை ஓட்டும் திறனில்லாத இக்காலத்தில் எங்கிருந்தாவது அதிஷ்டம் வருமாவென்று மனப்பால் குடிக்கும் பழக்கம் இந்த ஆசைக்குத் தூபமிடுகிறது; அதனைத் தூண்டுவது நியாயமா?

இந்த அடிப்படையிலேயே இன்று இங்கு நடைபெறும் பல்வேறு சுவீப் திட்டங்கள் செழிப்படைகின்றன.

மனிதனின் பணம் குவிக்கும் ஆசை; அதிஷ்டத்தில் அசையாத நம்பிக்கை; கடின உழைப்பில் கசப்பு; இன்றைய பொருளாதார நெருக்கடி என்ற சாட்டு - இவையெல்லாம் திரண்டு உருவெடுக்கும் வகையில் அரசாங்கமே இந்த லொத்தர் உலகத்தைச் சீரமைத்துச் செப்பனிட்டு வருவது பெரிதும் வருந்தத்தக்கது.

நாம் பழைய வைதிகக் கோட்பாடுகளை வரவழைத்து, இன்றைய வர்த்தக சமுதாயத்தின் நலன்களைப் புரியாதவகையில் இவ்வாறு கூறுகிறோமென்று நினைப்பது தவறு.

பொருளாதாரம் என்ற பதத்திலேயே அதன் ஆழமான கருத்துப் புலப்படுகின்றது. பொருளை எப்படியாவது தேடிவிட வேண்டுமென்ற பொறுப்பற்ற போக்கை ஆதாரம் என்ற சொல் நிராகரிப்பது தெளிவு.

'சூதும் வாதும் வேதனை செய்யும்' என்ற பழமொழிக்குஇன்றையபொருளாதாரத்தில், இடமில்லையா?

தார்மீக சமுதாயத்திற்கும் சூதாட்டத்தை உண்மையில் குறிக்கும் சுவீப் திட்டங்களுக்கும் எவ்வகையிலும் ஒற்றுமை உண்டா?

திடீர் தேநீர் போன்ற திடீர் லொத்தர் தினசரி நிகழ்ச்சியாய் விட்டது; வாரத்துக்கொரு முறை தேசிய சுவீப்; மாதமொரு முறை மகாஜன சம்பத்; வருடமொரு முறை மகாபொல, இவற்றுடன் கம்முதாவ சுவீப் என்று இன்னொன்று-இந்தப் பட்டியல் பெருகுமல்லாமல்சுருங்குமென்ற சாத்தியம் இன்றைய சமூக வாழ்க்கையில் காண முடியவில்லை.

வெளிநாட்டு வேலையால் இலங்கைக்குள் வந்து குவியும் பணமும் ஆடம்பர பொருட்களும் இங்கு கொலை, கொள்ளை, களவு போன்ற அக்கிரமங்கள் அதிகரிக்க ஒரு முக்கியகாரணம்; இந்த முடிவை வெளிப்படுத்தியது அண்மையில் நடைபெற்ற உயர்மட்ட பொலிஸ் குழுவின் அறிக்கையாகும்.

உடல் உழைப்பில்லாத உல்லாச வாழ்வை நாடும் சோம்பேறிக் கூட்டம் இது போன்ற லொத்தர் திட்டத்தில் நாட்டம் கொள்வதில் என்ன அதிசயம்?

கிராம அபிவிருத்திக்கு அத்தியாவசியமான உழைப்பை கிராம வாசிகளே உதவ வேண்டுமென்பது அரசின் அடிப்படைக் கொள்கை; இதற்கு முரண்பட்டதே இந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு.

பண வீக்கத்துக்குமருந்து உற்பத்தியை அதிகரிப்பதேயென்று சொல்வது எளிது. அதேபோல் வீண் விரயத்தைக் குறைத்து வாழப் பழகுவோமானால் இந்தத் துன்பமான கட்டத்தைத் தாண்டலாமென்பதும் வெறும் வேதாந்தம்.

இவ்வாறு போதிக்கும் அமைச்சர்களும், அரசும் தாமே அதற்கு முன்மாதிரியாக அமைய வேண்டும். கையில் கிடைக்கும் அற்ப பொருளைச் சூதில் இழக்கும் வழக்கம் அறவே ஒழிக்க வேண்டும்.

இன்றைய இரவலர் நாளைய புரவலராக முடியுமென்ற கனவை நிறைவேற்ற அவாவுவதற்கு தேசிய சீட்டிழுப்புத் திட்டம் தூண்டுகோலாகின்றது.

## நினைவுப் பரிசு

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி சி. சி. தமிழ்க் கலவன் பாடசாலையில் திறமை பெற்ற வகுப்பு ரீதியாக 1-ம் 2-ம் 3-ம் இடத்தைப் பெற்றவர்களுக்கு அமரர் பொன்னம்பலம் நாகரத்தினம் (பப்பம்மா) நினைவுப்பரிசில் ஆக அவர் குடும்பத்தினரால் பரிசுப்புத்தகங்கள் வழங்கப்பட்டன.

இவ்வைபவம் (27-1-83) வியாழக்கிழமை குறித்த பாடசாலையில் நிகழ்ந்தது. முதலாவது சிரார்த்த தின நினைவாக நிகழ்த்தப்பட்டது.

வருடம் தோறும் இவருடைய நினைவாக இப்பரிசில் வழங்கப்படும்.

# கருணையின் சின்னமான 'செஞ்சிலுவை' சங்கம் யாழ்ப்பாணத்திலும் ஆரம்பம்

த. பாலதேவன்

('செஞ்சிலுவைச் சங்க, யாழ்.பிரிவு செயலாளர்)

1859 ஆம் ஆண்டு ஒரு நாள் இத்தாலியின் சொல்பிறினோ நகரின் தேவாலயமொன்றில் ''நிறுத்து! அப்படிச் செய்ய வேண்டாம். நாமெல்லோரும் சகோதரர்கள்''! என்ற ஒரு ஆணின்கனத்த குரல் கட்டளையிடும் தோரணையில் ஒலித்தது!

அன்றிலிருந்தே 'செஞ்சிலுவைச் சங்கமும் உதயமாகத் தொடங்கியது அவ்வாறு ஒலித்த குரல் வேறுயாருடையதுமல்ல. ஹென்றி டுனண்டன் என்றழைக்கப்படும் செஞ்சிலுவைச் சங்க ஸ்தாபகருடைய குரலே அது!

அந்த ஆண்டில் ஆஸ்திரியர்களுக்கும். பிரெஞ்சுக்காரர்களுக்குமிடையே பெரும் யுத்தம் மூண்டிருந்தது இருதரப்பிலும் யுத்தவிளைவுகள் கொடூரமாகவிருந்தன. கோடிக்கணக்கானவர்கள் காயமடைந்து அல்லது இறந்து போகலானார்கள்.

இத்தகைய சூழ்நிலையிலேயே ஹென்றி டுனன்ட் ஒருநாள் இத்தாலியின் சொல்பிறினோ நகர் வழியாகச் சென்றுகொண்டிருந்தார். அந்த நகரின் தேவாலயமொன்றில் பிரெஞ்சு- ஆஸ்திரிய போரினால் பாதிப்படைந்தவர்கள் தஞ்சமடைந்திருந்தனர். ஆலய உட்பிரகாரம் தகுந்த இடவசதிகளைக் கொண்டிராததால் அங்கிருந்த சுமார் 500 போர் அகதிகள் ஜீவமரணப் போராட்டம் நடத்திக் கொண்டிருந்தனர். இவர்களை இரு டாக்டர்கள் மட்டுமே கவனித்துக் கொண்டிருந்தனர்.

இந்த அவலங்களைக் கண்ட ஹென்றி டுனட்டின் மனம் பதைத்துக் கொண்டிருந்தது. அவ்வேளையில் இருபோர்க் கைதிகளை இரு வீரர்கள் அந்த ஆலயப்படிகள் வழியே இழுத்துவந்தனர். அந்த இரு கைதிகளும் புண்பட்ட நிலையில் வலி பொறுக்கமுடியாது அந்த வீரர்களின் இழுபறிக்குள்ளாகியிருந்தனர்.

இக்கொடூரக் காட்சியைக் கண்டபோதே ஹென்றி டுனன் ''நிறுத்து! அப்படிச் செய்யாதே; நாமெல்லோரும் சகோதரர்கள்!'' என்று முழங்கினர்.

ஹென்றி ஒரு சாதாரண தொழிலதிபராக இருந்தார். அவருக்கு வட ஆபிரிக்காவில் பிரெஞ்சுக் காலனித்துவப் பகுதியொன்றில் தொழிலகங்கள் இருந்தன.

### ஆரம்பம்

சொல்பிறினோ நகரதேவாலயத்தில் வைத்து தனது மனதில் நிலையான இடத்தைப் பிடித்துக்கொண்ட அந்த அவஸ்தைக் காட்சிகள்பற்றி அப்போது அதிகாரம் கொண்டிருந்தவர்களுக்கும், செல்வாக்குப் படைத்தவர்களுக்கும் டுனன்ட் கடிதங்கள் எழுதலானார்.

அக்கடிதங்களில் அபாய வேளைகளில் மனிதகுலம் எதிர் நோக்கும்சிரமங்கள் குறித்து தாம் நேரடியாக உணர்ந்தவற்றையும், கண்டவற்றையும் தெளிவாக விளக்கியிருந்தார்.

இதனைத் தொடர்ந்து ஏழு வருடங்களில் சுவிட்சர்லாந்தின் ஜெனீவா நகரில் செஞ்சிலுவைச்சங்கத்தின் முதலாவது அங்குரார்ப்பணக் கூட்டம் இடம்பெற்றது. இக்கூட்டத்தில் முதல் தடவையாக இராணுவ வைத்தியசாலைகள், நடமாடும் வைத்தியசேவைகள் என்பன சட்ட ரீதியாக அங்கீகரிக்கப்பட்டன.

### சின்னம்

வெள்ளை நிறத்தைப் பின்னணியாகக் கொண்ட 'சிவப்பு' நிறச் சிலுவை செஞ்சிலுவைச் சங்கத்தின் சின்னமாக உருவெடுத இச்சின்னம் கருணையின் வடிவமாக உலகெங்கும் கொடிகட்டிப் பறக்கவிடப்படலாயிற்று.

ஹென்றி டுனன் 'செஞ்சிலுவைச் சங்க' வளர்ச்சி குறித்த தமது பரந்த திட்டங்களை வெறுமனே மனதில் வளர்த்துவரவில்லை. அத்திட்டங்கள் அமுலாக தன்னைத் தீவிரமாக இச்சங்கத்திற்கு அர்ப்பணித்தார்.

### நோபல் பரிசு

1901ம் ஆண்டு ஹென்றி டுனன்டனின் அளப்பரிய இச்சேவை, சுவீடனின் 'நோபல்' பரிசு நிறுவனத்தினரால் மதிப்பிடப்பட்டு, அப்பரிசும் அவருக்கு வழங்கப்பட்டது.

1910ஆம்ஆண்டில் ஹென்றி டுன்டன் ஒரு மாபெரும் சேவையை உலகிற்கு அறிமுகப் படுத்திய திருப்தியில் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

செஞ்சிலுவைச் சங்க, சேவை டுன்டனின் மறைவுடன் செயலிழக்கவோ, அல்லது முடங்கிவிடவோ இல்லை. மாறாக ஆழவேரூன்றிய விருட்சமாக கிளைவிட்டு வளரத் தொடங்கியது.

### யாழ். பிரிவு

இத்தகைய 'செஞ்சிலுவைச் சங்க'த்தின் கிளை ஒன்று இலங்கையிலும் செயல்படுகின்றது. இதன் ஒரு பிரிவு கடந்தநவம்பரில் யாழ்ப்பாணத்திலும் ஆரம்பித்து வைக்கப்பட்டது'

1981ம் ஆண்டு கிளிநொச்சியில் ஏற்பட்ட வெள்ளஅபாய நிலையின் போதும் செஞ்சிலுவைச் சங்கம் தனதுசேவையை வழங்கியது. இத்துடன் இலங்கையின் ஏனைய பகுதிகளில் ஏற்பட்ட இயற்கை அழிவுகளின் போதும் இச் சங்கம் தனது கடமைகளை சரிக்கராது புரிந்தது

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள செஞ்சிலுவைச் சங்கப்பிரிவு, சேவை மனப்பான்மை கொண்ட சகலரையும் தனது பணிகளை வடமாகாணத்தில் விஸ்தரிக்கும் பொருட்டு இருகரம் நீட்டி அழைக்கின்றது.

இச் சங்கம் முழுக்க,முழுக்க சேவை மனப்பான்மையையே கொண்டதொன்று வீண் கேளிக்கைகளுக்கோ, அர்த்த மற்ற சேவைகளுக்கோ, இதில் இடமில்லை.

எனவே தன்னைப் போலவே பிறரையும் நேசிக்கும்உயர்ந்த பண்பினை வளர்க்கவும் ,சேவை மனப்பான்மை மூலம் ஆத்ம திருப்தியைப் பெறவும் இச் சங்கம் அரிய சந்தர்ப்பங்களை நம்மவருக்கு வழங்கி நிற்கிறது இச் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி மனித குலத்துக்கு அதி உன்னத சேவைகளை வழங்குவோமாக! ★

பாராட்டுப்பெறும்

# சென். திரேசாவும் அதன் அதிபரும்

[பரந்தன்]

கிளிநொச்சி சென். திரேசா மகளிர் கல்லூரிக்கு பன்முகப் படுத்தப்பட்ட வரவுசெலவு திட்டத்தில் மின்இணைப்பு, தொலைக்காட்சி, பாண்ட்வாத்தியம் ஆகியவற்றிற்கு நிதி ஒதுக்கியுள்ளதாக கிளிநொச்சி பாராளுமன்றஉறுப்பினர் திரு. வி ஆனந்தசங்கரி இக்கல்லூரி வருடாந்த மதியபோசன விருந்து வைபவத்தில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்

மேலும் அவர் இம்மகளிர் கல்லூரி தமது இதய நாடியென்றும் இதன் முன்னேற்றத்தில் தாம் கண்ணும்கருத்துமாயிருப்பதாகவும் இதற்கு வேண்டிய சகல உதவிகளையும் தாம் செய்து வருவதாகவும் சென்ற ஐந்தாண்டு காலத்தில் அதிபர் செல்வி ராதாசோமசுந்தரம் இக்கல்லூரியை முன்னேற்றப்பாதையில் கொண்டு செல்வதையிட்டு தாம் மகிழ்வதாகவும் கல்லூரி அதிபரை பாராட்டினர். இவ்விருந்து வைபவத்திற்கு அதிபர் செல்வி ராதா சோமசுந்தரம் தலைமை தாங்கி கல்லூரி முன்னேற்றத்தையிட்டு சில குறிப்புகள் கூறினர்.

கிளிநொச்சி வட்டார கல்வி அதிகாரி திரு. எம். சண்முகநாதன் இக் கல்லூரி முன்னேற்றத்தை தாம் சென்ற பல வருடங்களாக பார்த்தபொழுது இது துரித முன்னேற்றம் அடைவதற்கு அதிபர் சோமசுந்தரத்தின் விடாமுயற்சியே காரணமென்றும் இவ்வதிபரின் காலத்தில் கலவன் பாடசாலையாயிருந்த இக கல்விக்கூடம், மகளிர் கல்லூரியாக மாற்றி அமைக்கப்பட்டு பல்கலைக்கழக உயர்கல்விக்கு வித்திட்ட பெருமையும் அன்னாருக்கு உண்டென்பதையும், கொத்தணியை இக்கல்லூரி சிறப்பிக்கிறதெனவும் கூறினார்.

கொத்தணி அதிபரும், கிளிநொச்சி மகாவித்தியாலய அதிபருமான திருவாளர் இரா. சின்னத்தம்பி அவர்கள் விசேஷ அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் கொத்தணி அமைப்புக்கு இக் கல்லூரி ஆற்றிவரும் சேவை பலனுள்ளதென்றும் கூறி அதிபர் செல்வி ராதா சோமசுந்தரத்தைப் பாராட்டினார்.

சிறப்பு விருந்தினராக முன்னாள் கிளிநொச்சி பட்டின சபை உப தலைவரும், சிறந்த சமூக சேவையாளருமான சமூகமணி திரு. கிருஷ்ணராசாவும் கலந்து சிறப்பித்தார். விஞ்ஞான ஆசிரியை திருமதி இரத்தினம் நன்றி உரை கூறினார். [இ]

'காந்தி' திரைப்படம்;

# ஹொலிவூட்டின் ஐந்து தங்க விருதுகளைப்பெற்றது!

லண்டன், ஜன 31

ஆங்கிலத்திரைப்பட டைரக்டர் றிச்சார்ட் அரேன்பரோ இயக்கிய 'காந்தி' ஆங்கிலத் திரைப்படத்துக்கு ஹொலிவூட் வெளிநாட்டு பத்திரிகை நிறுவனத்தின் ஐந்து தங்கவிருதுகள் கிடைத்துள்ளன.

'காந்தி' திரைப்படத்தில்; காந்தியாக நடித்த பென் கிங்ஸ்லி என்னும் 39 வயது நடிகருக்கு 1982ம் ஆண்டின் சிறந்த புதிய ஆண் நடிகருக்கான தங்கவிருதும், றிச்சார்ட் அரேன்பரோவிற்கு சிறந்த இயக்குநருக்கான தங்க விருதும், ஜோன் பிரிலிக்கு சிறந்த திரைக்கதை-வசனத்துக்கான தங்கவிருதும், சிறந்த அயல்நாட்டுதிரைப்படத்திற்கான தங்க விருதும், சிறந்த தயாரிப்புக்கான தங்க விருதும் கடந்த 30ம் திகதி இரவு லோஸ் வைத்து வழங்கப்பட்டுள்ளது.

'காந்திஜி'யின் வட்டமேசை மகாநாட்டின் போது சிறப்புப் பணியாற்றியவரும், இந்திய அரசிலமைப்பின் கர்த்தாக்களில் ஒருவரும், ஹரிஜனத்தலைவர்களில் ஒருவருமான டாக்டர் அம்பேத்கார் பற்றி தகவல்களோ, ஒருவரியோகூட இல்லாத இக்'காந்தி' திரைப்படம் வெளிவந்துள்ளதாக டாக்டர் அம்பேத்காரின் மனைவி திருமதி ஸவிதா அம்பேத்கார் கண்டித்துக்கருத்து வெளியிட்டுள்ளார். (உ)

## குண்டு வெடிப்பு: 30 பேர் பலி!

பெய்ரூட், ஜன. 30

லெபனானில் நேற்று இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவமொன்றில் 30 பேர்பலியானார்கள். பலர் காயமடைந்தனர். இதனால் மூன்று மாடிக் கட்டிடமொன்றும் சேதமடைந்தது. [வெ]

## பாரத கடற்கரை பாதுகாப்புப்படை நவீனமயம்

பம்பாய் ஜன 31

6000 சதுர கிலோ மீட்டர் கடற் பிரதேசத்தைப் பாதுகாக்கும் கடற்கரையோரத் தரைப்பாதுகாப்பு படைக்கு, மேலும் நவீன பாதுகாப்புச் சேவைக் கப்பல்களைப் பாரத மத்திய அரசு வழங்கவுள்ளது.

படைச்சேவையில் ஏற்கனவே 12 கப்பல்கள் இருந்தன. தற்போது 8 புதிய நவீன ரக கப்பல்கள் கொடுக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டு முடிவிற்குள் மேலும் 25 நவீன ரகங்களிலான கப்பல்கள் கிடைக்கவுள்ளதாக துணை அட்மிரல் தெரிவித்தார்.

கள்ளக் கடத்தலை முறியடிப்பதில் சுங்கப் பகுதியினருக்குப் பாதுகாப்பு அளிப்பது. கடலில் நடைபெறும் கள்ளக் கடத்தல்களை முறியடிப்பது மீனவர்களுக்கு கடற்றொழிலின் போது பாதுகாப்பு, மீட்பு உதவிகளை அளிப்பதே பாரத கடற்கரையோரப்பாதுகாப்புப்படையின் சேவையாகும்.

இப்படையினர் பாரத கடல் வாணிபத்திற்கு உறுதுணையாகவும் சேவையாற்றுகின்றனர் (உ)

## இடைதேர்தலில் போட்டியிட ஜெயலலிதா மறுப்பு

சென்னை, ஜன. 31

அ. தி. மு. க. வின் வேட்பாளராக திருச்செந்தூர் தொகுதிக்கான இடைத்தேர்தலில் போட்டியிடப்போவதில்லை என்று ஜெயலலிதா தெரிவித்துள்ளார்

அ. தி மு க. வின் ஒழுங்கு நெறிப்படி கட்சியின் முக்கிய உறுப்பினராக இருந்து கொண்டு ஆட்சி மன்றங்களில் பொறுப்பான பதவிகளைப் வகிக்கமுடியாது. இதற்கமைய திரு மோகனரங்கம்பதவிகளை ராஜினுமா செய்து தற்பொழுது ராஜ்ய சபா உறுப்பினராகத் தெரிவு பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது

திரு மோகனரங்கம்வகித்து வந்த அ. தி. மு. க. பொதுச் செயலாளர் பதவியைத் தற்போதுதிரு. மாதவன் பொறுப்பேற்றுள்ளார். இதனைச் சுட்டிக்காட்டிய ஜெயலலிதா தான் அ. தி. மு. க. வின் பிரசாரப் பொறுப்பாளராகவும், இலவசத்துணவுத்திட்ட மத்திய குழுவின் உறுப்பினராகவும் இருந்து வருவதால் இடைத்தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிடமுடியாது எனினும் சட்டசபைகளுக்குப் பதவி பெற்றுத்தான் சேவை செய்யவேண்டும் என்ற கருத்து பிழையானது என்றும் கழகத்தில் இருந்து கொண்டே நற்பணி ஆற்ற முடியும் என்றும் கூறினார். (உ)

## விசாரணையின்பின் விடுதலை

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பிலுள்ள ஆசிரியை ஒருவரின் வீட்டில் நடைபெற்ற 15,000 ரூபா பெறுமதிமிக்க தாலிக்கொடி கொள்ளை சம்பந்தமாக காங்கேசன்துறை பொலிசாரினால் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட சில்லாலையைச் சேர்ந்த சிறில் என்பவரும் மற்றும் ஒரு இளைஞரும் விசாரணையின் பின் பொலிசாரினால் விடுதலைசெய்யப்பட்டுள்ளனர்.

# "நாம் வாழ்வது 'நமது நாடு' எனத் தெளிவு படுத்தியவர் பாரதி"

## தமிழக அறிஞர் கோவேந்தர் பேச்சு

[மயிலிட்டி]

வள்ளுவர், கம்பர் போன்ற பெரும் அறிஞர் பல அறிவுரைகளை உரைத்தபொழுதும் ஒரு முறையாவது இது என் நாடு என்று சொல்லப் பின்னின்றார்கள் ஆனால் பாரதியார் மட்டுமே நாம்வாழ்ந்துகொண்டிருப்பது நமது நாடுதான் என்பதை தெளிவுபடுத்தினர். அத்துடன் வள்ளுவர், கம்பர், இளங்கோ போன்ற அறிஞர்களை இனங்காட்டிய பெருமை சுப்பிரமணிய பாரதிக்குரியதே''

இவ்வாறு இந்தியாலிருந்து வருகைதந்த தமிழறிஞர் திரு த. கோவேந்தர் வர்த்தலை விளானில் நடைபெற்ற கருத்தரங்கில் சொற்பொழிவாற்றுகையில் கூறினர்.

தெல்லிப்பழை மகளிர் இயக்குனரின் அனுசரணையுடன் தெல்லிப்பழை வயல்' கலை இலக்கிய வட்டம் இந்த விழாவை ஒழுங்குசெய்திருந்தது. வயல் கலை இலக்கியவட்டத்தின் தலைவர் திரு நா. சுப்பிரமணிய ஐயர் தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கு 'வயல்' இலக்கிய வட்ட இணைச்செயலாளர் திரு. சி. உதயகுமாரின் வரவேற்புரையுடன் ஆரம்பமானது.

திரு. கோவேந்தன் தொடர்ந்தும் சொற்பொழிவாற்றுகையில் கூறியதாவது:

தொல்காப்பிய நூலுக்கு உரை எழுதி பதிப்பித்த பெரியார் வித்துவ சிரோமணி இ. கணேசையா அவர்கள் வாழ்ந்த நிலமாகிய வர்த்தலை விளானுக்கு நான் வந்ததையிட்டுப் பெருமையடைகிறேன். 1952ம் ஆண்டளவில் பிரவேச பண்டிதப் பரீட்சைக்குப் படிக்கும்பொழுது கணேசையரவர்களின் நூலே டேருதவியாக அமைந்தது. இந்த நிலத்தில் வாழ்கின்ற மக்கள் சிறந்த பண்பாடுடையவர்களாக இருக்கின்றனர்

''மக்கள் உணர்வுப்பாலத்தின் அடிப்படையில் நல்ல முறையில் இங்கு வாழ்வதை என்னால் காணக்கூடியதாக இருக்கிறது. அங்குள்ள நிலைமைகளைவிட இங்குள்ள நிலைமைகள் பாராட்டக்கூடியதாக இருக்கிறது. பாரதி காட்டிய புதுமைப் பெண்களாக வாழ முனைந்து நிற்கின்ற பெண் குலத்தை இங்கு நான் கண்டு பூரிக்கிறேன். இங்கு பெண்கள் சமத்துவம் பேணப்பட்டுவருவதைக் காணக்கூடியதாகவிருக்கிறது. அத்துடன் கல்வியில் ஈழத்துப்பெண்கள்சிறந்து விளங்குகின்றனர். இத்தனைக்கும் பாரதியின் பெண் விடுதலைக்குரலேகாரணம். ஈழத்து மக்கள் பாரதியார்மீது கொண்டுள்ள பற்றை இவற்றின்மூலம் உணரக்கூடியதாகஇருக்கிறது. பெண்கள் விடயத்தில் பாரதியாரே தான் முதன்முதலிக் குரல் கொடுத்தவராவார்.

''நான் பாரதியாரைப்பற்றி நூல்கள் வாயிலாகக் கண்டவனல்ல. பாரதியாருக்கு தாசனாக தன்னையாக்கிய பாரதிதாசன் மூலமாகவே வேற்றுமையின்மை, தமிழ் உணர்வு, விடுதலைத்துடிப்பு, சமூகச் சிந்தனை நமக்குத் தொழில் கவிதை, நாட்டுக்கு உழைத்தல், இமைப்பொழுதுப் சோர திருத்தல் என்று தமிழுக்காக தன்னை அர்ப்பணித்த பாரதியாரைக் கண்டேன், பாட்டுத் திறத்தாலே வையத்தைப் பாலித்திட விழைந்தவர் பாரதியார் பாரதி தொடர்ந்தும் சில வருடங்கள் வாழ்ந்திருந்தால் தமிழிலக்கியத்துறை பெரும் சிறப்பை காணக்கூடியவகையில் புதுமையை அடைந்திருக்கும்'' என்றார்.

வயலின் இலக்கிய வட்ட இணைச்செயலாளர் திரு. நா சபேசனும் உரையாற்றினர்.

# 'கிராமிய அபிவிருத்தியில் பெண்கள் பங்கு முக்கியமானது''

(புலோலி)

''கிராமிய அபிவிருத்தியில் பெண்களின் பங்குமுக்கியமானது. எனவே பெண்கள் கிராமிய அபிவிருத்தியில் தமது பங்கினைச் செலுத்தத் தவறக்கூடாது கிராமிய ஒற்றுமையைப் பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்கள் மேற்கொள்ள வேண்டும்'' என்று குடத்தனை மாதர் கிராம அபிவிருத்திச் சங்க விசேட பொதுக் கூட்டத்திற்குத் தலைமை வகித்து உரையாற்றிய பருத்தித்துறை உதவி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி கே. நவமணிகுறிப்பிட்டார்

குடத்தனை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றிய செல்வி நவமணி கூறியதாவது:–

''கிராமப் பகுதிகளில் பல அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளப்படவேண்டும். கிராமிய மூலவளங்கள் சிறப்பாகப் பயன்படுத்தப்படவேண்டும். இதற்கான நடவடிக்கைகளை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மேற்கொள்ளவேண்டும்.

''இம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவியாகச் செல்வி சி. இராசேஸ்வரியும், செயலாளராகச் செல்வி. மு. யோகேஸ்வரியும் பொருளாளராக செல்வி க. வசந்தகுமாரியும், போஷகராகத் திருமதி ந. அன்னப்பிள்ளையும் கணக்காய்வாளராகத் திருமதி கு. இராசேஸ்வரியும், செயற்குழு உறுப்பினர்களாகத் திருமதிகளான இ. பிறேமவதனி, த. சின்னம்மா, இ. தயாநிதி, செல்விகளான க. கலாவதி, பொ. ஜானகி, தி. மனோரஞ்சிதம் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

# மனித உரிமைகள் மீறல்களை

## ஐ. நா. ஆணைக்குழு ஆராய்கிறது

ஜெனிவா ஜன 31

உலகின் பல்வேறு நாடுகளிலுள்ள மக்கள் நியாயமான விசாரணையின்றி மரணதண்டனைக்குள்ளாகிவருவது குறித்தும், மனிதாபிமானமற்ற முறையில் கொடுமைகளுக்கும் சித்திரவதைக்கும் உட்படுவது பற்றியும் போலந்தில் மனித உரிமைகள் மீறப்பட்டிருப்பது குறித்தும் ஐ நா. வின் மனித உரிமைகள் ஆணைக்குழு ஆராய ஆரம்பித்துள்ளது.

ஐ நா. வின் மனிதஉரிமைகள் ஆணைக்குழு நேற்று முன்தினம் ஜெனிவாவில் கூடி உலகின் மனிதஉரிமைகள் மீறல்கள் பற்றி ஆராய்ந்து வருகின்றது. (உ)

## பெய்ரூட்டில் மீண்டும் சண்டை

பெய்ரூட், ஜன 31

பெய்ரூட் நகரில் கிறிஸ்தவர்களுக்கும முஸ்லிம்களுக்குமிடையில் மீண்டும் சண்டை ஆரம்பமாகியுள்ளது.

மூன்றுதினங்களுக்கு முன்னர் பெய்ரூட்டிலுள்ள மூன்றுமாடிக் கட்டிடமொன்று குண்டு வெடிப்பினால் சேதமடைந்ததையடுத்தே இவ்யுத்தம் ஆரம்பமானதாகத் தெரிவிக்கப்பட்டது. (வெ)

## திருச்செந்தூர் இடைத்தேர்தல் வேட்பாளர் தெரிவு

சென்னை, ஜன. 31

திருச்செந்தூர் தொகுதி இடைத்தேர்தலுக்கான தி. மு. க. வேட்பாளர் பெயர் புதன்கிழமை அறிவிக்கப்படும் என்று தி. மு. க. தலைவர் கலைஞர் மு. கருணாநிதி தெரிவித்தார்.

தி. மு. க. வேட்பாளர் தெரிவும், ஏனைய கட்சிகளிடம் தி. மு. க. வேட்பாளருக்கு ஆதரவு கோரும் பொறுப்பும் தி. மு. க. வின் மத்திய நிருவாகத்தினால் கழகத் தலைவர் கலைஞர் மு. க. விடமும், பொதுச் செயலாளர் அன்பழகனிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஜனதா கட்சி வேட்பாளராக நெல்லை நவமணி தெரிவு செய்யப்பட்டதாக ஜனதா கட்சியின் தமிழ்நாடு பிரிவுத் தலைவர் ஜனப் முகமது இஸ்மாயில் தெரிவித்தார். [உ]

## 4 சர்வதேச விமானங்கள் புதுப்பொலிவு

புதுடில்லி, ஜன 31

மண்டலச் சார்பற்ற 7வது உச்சி மகாநாட்டை முன்னிட்டு 48 லட்சம் ரூபா செலவில் புதுடில்லி, பம்பாய், கல்கத்தா, சென்னை ஆகிய நான்கு சர்வதேச விமான நிலையங்களை புதுப்பொலிவு பெறச் செய்யும் வேலைகளை பாரத விமானச்சேவையின் அமைப்புக்குழு முடித்துள்ளது. [உ]

## ஸ்டீவன் பொதுச் செயலாளர்?

புதுடில்லி, ஜன. 31

மத்திய அமைச்சரவையின் கப்பல் போக்கு வரத்து அமைச்சர் சி, எம். ஸ்டீவன் தமது அமைச்சர் பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

பிரதமர் இந்திரா காந்தியின் மத்திய அமைச்சர்களின் ராஜினாமாவை அடுத்து கடந்த சனிக்கிழமை புதிதாக உருவாக்கப்பட்ட அமைச்சர்களில், அமைச்சர் ஸ்டீவன் தொடர்ந்தும் அதே துறைக்கு அமைச்சராகக்கப்பட்டார். ராஜினாமா செய்துள்ள திரு சி எம. ஸ்டீவன் இந்திராகாங்கிரஸின் பொதுச் செயலாளர் பதவிக்கு நியமிக்கப்படலாம் எனத் தெரிய வருகிறது.

அதே நேரத்தில் இவ்வாரம் இந்திரா காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் பதவிக்கு உரியவர்களின் பெயர் அறிவிக்கப்படும் எனத் தெரிய வருகிறது. (உ

## பெரியார் நூற்றாண்டுவிழா

வேலூர், ஜன 31

திராவிடக்கழக ஸ்தாபகரும் பகுத்தறிவுத் தந்தையுமான அமரர் ஈ வெ. ரா. பெரியாரின் நூற்றாண்டு விழாவை தமிழக மாநில கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் வேலூரில் ஆரம்பித்து வைத்தார்.

தமிழகத்தில் பெரியாரின் நூற்றாண்டு விழாவைதிராவிடக் கழகம் சிறுகிராமங்கள் முதல் பெரும் நகரங்கள்வரைகொண்டாடவும் சமூகப்பணிகளை மேற்கொள்ளவும் ஏற்பாடுகளைச் செய்துள்ளது. [உ]

## பூம்புகார் கொலை வழக்கு:

# "1ம் எதிரிக்கு சுருட்டுக்கொடுத்து காசு வாங்கியது சுகுமார் தான்"

[யாழ்ப்பாணம்]

''இராசேந்திரம்காயப்பட்டு ஆஸ்பத்திரியில் இருந்தது தெரியும் எப்படி காயமுற்றார் என்பது எனக்குத் தெரியாது.

அரியாலை பூம்புகார் கொலை வழக்கில் சாட்சியமளித்த சி. திருநாவுக்கரசு, குறுக்குவிசாரணையின்போது மேற்கண்டவாறு கூறினர்.

இவ்வழக்கு யாழ். நீதிமன்றத்தில் நீதவான் திரு. வி. ஜெகசோதி முன்னிலையில் நடைபெற்றது.

இவ்வழக்கில் பூம்புகாரில் ம. தியாகராசா, ஐ. ரத்தினம், பொ. மகேந்திரன், பொ. குலேந்திரன், ப. துரைசிங்கம், ம. விஜயகுமார், மா. மகேந்திரராஜா ஆகியோர் ச. மோசஸ் என்பவரை 82 மார்ச் 29ல் கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

1ம், 2ம், 3ம், 5ம், 7ம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஆர். பி. சபாரட்ணம் சட்டத்தரணி ரி விங்கராசாவின் அனுசரணையுடன் ஆஜரானர் 4ம, 6ம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ரி. லிங்கராசா ஆஜரானர் வழக்காளிதரப்பில் பொலிசார் உதவியுடன் சட்டத்தரணி ஆர். ரி. விச்ன ராசா ஆஜரானர்எதிரிகள்தரப்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். பி. சபாரட்ணம் குறுக்கு விசாரணைசெய்தபோது சாட்சி கூறியதாவது: 1-ம் எதிரிக்கு சுருட்டு கொடுத்து 50 சதம் வாங்கியது சுகுமார்தான். பொலிஸாருக்கு எனது வாக்குமூலத்தில் நான் தான் சுருட்டு கொடுத்து 50 சதம் வாங்கியிருந்ததாக கூறியிருந்தால் அதுபிழை என்மனைவியிடம் ராஜேந்திரம்கடன்கேட்டு அவ மறுக்க ராஜேந்திரம் மனைவியை ஏசினர். இதையிட்டு நான் ராஜேந்திரத்திடம் கதைத்து சண்டைபிடிக்கவில்லை.

சட்; அவ்வாறு பொலிஸாரின் வாக்குமூலத்தில் கூறியிருந்தால் அது சரியா? பிழை மோசஸ் தாக்கப்பட்டதினம ராஜேந்திரம் படுகாயப்பட்டார். யார் அவருக்கு காயம் விளைவித்தது என்று எனக்குத் தெரியாது- எனக்கும் எதிரிகளுக்குமிடையில் கோபதாபம் எதுவும் இல்லை எதிரிகள்எனது கடையை உடைப்பதற்கு ஒரு காரணமும் இருக்கவில்லை.

சட்: ராஜேந்திரம் உமது கடையை உடைக்ககாரணம் இருந்ததா?-ஆம்

சட்: எதிரிகள் கடையை உடைத்து சண்டையிடித்து கொண்டிருக்கும்போது மோசஸ் கடைக்குவந்தாரா?-இல்லை?

சட்: மோசஸ் வந்து சமாதானம்பேசினரா? -இல்லை

சட்; அவர்கள் சண்டைபிடித்துக் கொண்டிருக்கும்போது மோசஸ்வந்து சமாதானம் பேச அவருக்கும் அடித்துக்காயம் விளைவித்தார்கள் என்று பொலிஸாருக்கு கூறினரா?- இல்லை அப்படிக்கூறியிருந்தால் அதுபிழை இன்ஸ்பெக்டர் சிறிதரன் 30ம் தேதி சம்பவம் நடந்த இடத்தைப்பார்வையிட்டார் அவர்வந்தபோது நான்தான் இடத்தைக்காட்டினேன் இன்ஸ்பெக்டருக்கு முதல் வாக்குமூலத்தில் கூறத்தவறியதை அன்று கூறவில்லை. எனது இரண்டாவது வாக்குமூலம் 5ம் நாள் தான் பதிவு செய்யப்பட்டது. இன்ஸ்பெக்டர் சிறிதரன் சுமார் ஒருமணி நேரம் இடத்தைப்பார்வையிட்டு குறிப்புகள் எடுத்தார்.

விசாரணை இன்றுசெவ்வாய்க்கிழமை வரை ஒத்திபோடப்பட்டது. [க]

# 1000 ரூபா அபராதமும் ஒத்திவைக்கப்பட்ட சிறையும்!

[கிளிநொச்சி]

வடிசாராயம் வைத்திருந்ததாகக் குற்றம் சாட்டி தொடரப்பட்ட வழக்கில் எதிரிக்கு ஐந்து வருடத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட 6 மாத சிறைத் தண்டனையும், 1000 ரூபா அபராதமும் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

பரந்தனைச் சேர்ந்த சேசவன் கந்தையா என்பவர் சட்டவிரோதமாக தயாரிக்கப்பட்ட வடிசாரயத்தை வைத்திருந்ததாக தொடரப்பட்ட வழக்கு கிளிநொச்சி நீதிமன்ற நீதவான் ரி. ஜோகநாதன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. எதிரியான கந்தையாவை குற்றவாளியாக கண்ட நீதவான் ஜோகநாதன் மேற்கண்ட தீர்ப்பை வழங்கினர்.

தர்மபுரத்தைசேர்ந்த குஞ்சி பாலன் இராமகுட்டி என்பவர் வடிசாராயம் வைத்திருந்ததாக குற்றஞ்சாட்டி தொடரப்பட்ட வழக்கு கிளிநொச்சி நீதவான் ரி. ஜோகநாதன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது எதிரிக்கு 1000 ரூபா அபராதமும் 5 வருட ஒத்திவைக்கப்பட்ட 6 மாத சிறைத் தண்டனையும் வழங்கப்பட்டது. (க)

## வசாவிளானில் சமாதான மன்றம்

(மாவிட்டபுரம்)

வசாவிளான் பகுதியில் கிராமமக்களிடையே ஏற்படும் சிறு பிணக்குகளை தீர்த்து வைக்க சமாதான மன்றம் அமைக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான கூட்டமொன்று வசாவிளான் ஜே. க. பாடசாலை மண்டபத்தில் ஆசிரியர் வ. கி. சுப்பிரமணியம் தலைமையில் நடந்தது.

அளவெட்டி சமாதான மன்றத்தலைவர் பண்டிதர் க. நாகலிங்கம் கட்டுவன் சமாதான மன்ற பிரமுகர் கே. எஸ். கந்தவனம், விசாவிளான் கிராமசேவையாளர் ஜே. அருளானந்தம், வசாவிளான் கிராமோதய சபைத் தலைவர் சி. சிவஞானம் உட்பட பல பிரமுகர்கள்மேற்படிசமாதான மன்றத்தின் அவசியம் பற்றி எடுத்துக்கூறினர். இறுதியில் சமாதான மன்றத்தின உறுப்பினர்கள் தெரிவு இடம்பெற்றது. தலைவர் திரு. கி. சிவஞானம், உபதலைவர் திரு. கி. கதிரவேலு, செயலாளர்: திரு. சா சபாநாயகம், உபசெயலாளர்: திரு வ. சி சுப்பிரமணியம், பொருளாளர்: திரு. இ கனகலிங்கம் 10 பேர் ஆலோசகர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர். (●)

## மருந்துக் கலவையாளர் இடமாற்றம்

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்ட சுகாதார சேவைக் கண்காணிப்பாளர் பிரிவில் இம்மாதம் தொடக்கம் இடமாற்றம் செய்யப்பட்டிருக்கும் மருந்துக்கலவையாளர் இடமாற்ற விபரம் பின்வருமாறு:-

ஏழாலை அரசினர் மருந்தகத்தில் கடமையாற்றிய எஸ். தனபாலசிங்கம் ஆனையிறவு அரசினர் மருந்தகத்திற்கும், ஆனையிறவு மருந்தகத்தில் கடமையாற்றிய வி. துரைசிங்கம் ஏழாலை அரசினர் மருந்தகத்துக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். அனலைதீவு அரசினர் வைத்தியசாலை மருந்துக் கலவையாளர் வி. கந்தையா தொல்புரம் அரசினர் மருந்தகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

தொல்புரம் மருந்தகத்தில் கடமையாற்றிய எஸ். சிவபாதரத்தினம் வட்டுக்கோட்டை அரசினர் வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

யாழ். அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றிய எஸ். கிருபானந்தன் உருத்திரபுரம் அரசினர் வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். உருத்திரபுரத்தில் கடமையாற்றிய எஸ். மன்மதராஜன் அனலைதீவு அரசினர் வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (க)

## ஆலய பரிபாலனசபை நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

கோவிலாக்கண்டி தெகிண்டன்பிட்டி ஸ்ரீ அரிகர புத்திர ஐயனர்கோவில் பரிபாலசபை நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்:- திரு. மா. பாலசிங்கம், செயலாளர்:- திரு. க. செல்வராசா. பொருளாளர்:- சி. கந்தசாமி நிர்வாகசபை உறுப்பினர்கள்:- திருவாளர்கள் நா. சண்முகரட்ணம், இ. கிருஷ்ணபிள்ளை, க. ஐ. ஐயாத்துரை, வி பத்மநாதன, ச. கந்தசாமி, ம. செல்வத்துரை, க. சந்திரன், க. இராசேந்திரம். ஆ நடராசா.

## ஜமால்தீன் நியமனம்

(வவனியா)

வவனியா மாவட்ட அபிவிருத்திசபை கூட்டணி உறுப்பினர் திரு. வை. சிற்றம்பலம் ராஜினுமா செய்ததைத் தொடர்ந்து இவரது இடத்துக்கு ஜனுப் நாகூர் கனி ஜமால்தீன் நியமிக்கப்பட்டுள்ளார்.

கூட்டணி பட்டியலில் உள்ள உறுப்பினர்களுக்கு இடமளிக்கும் வகையிலேயே திரு. சிற்றம்பலம் தனது ராஜினுமாவை அபிவிருத்திசபைகூட்டத்தில் அறிவித்திருந்தது தெரிந்ததே.

## அபிவிருத்திசங்கம் அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

கைதடி தெற்கு கிராம அபிவிருத்திச்சங்க அங்குரார்ப்பண வைபவம் கைதடி தெற்கு சனசமூக நிலைய மண்டபத்தில் நிலையத்தலைவர் திரு. க. கதிரவ் தலைமையில் நடைபெற்றது.

உதவி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் இ. பரராசசிங்கம் சாவகச்சேரி எம். பி. வி. என். நவரத்தினம் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு அபிவிருத்திச் சங்கங்களின் பல்வேறு பணிகள் பற்றியும் எடுத்துரைத்தனர்

நிர்வாகக்குழு வருமாறு:

தலைவர்: வே சின்னத்தம்பி, உபதலைவர்: சி. சந்திரன், செயலாளர்: ஞானமுத்து, உபசெயலாளர் செல்வன் சு. குணசிங்கம், பொருளாளர் செல்வன் வி. இராசேந்திரம், நான்கு பேர் கொண்ட நிர்வாகமும் தெரிவு செய்யப்பட்டது.

## கிளிநொச்சி விவசாயப் பகுதியில்

# யானைகள் அட்டகாசம்!

## கிராமத்தை விட்டு வெளியேறும் அபாயம்!!

(கிளிநொச்சி)

''கிளிநொச்சி பொன்நகரில் யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளது இப்பகுதி விவசாயிகள் மிகவும் கஷ்டப்பட்டு செய்துவந்த நெற்பயிரை அறுவடைசெய்யும் பருவத்தில் காட்டுயானைகள் கூட்டம் கூட்டமாக வந்து நாசம் செய்கின்றன இவற்றிலிருந்து எமக்கு பூரணபாதுகாப்பை ஏற்படுத்தி தாருங்கள்''

இவ்வாறு கோரும் மகஜர் ஒன்றை பொன்னகர் விவசாயிகள் சார்பில் கிராமமுன்னேற்றச்சங்கத்தலைவர் திரு. பா. கணேசபிள்ளை கிராமியத் தொழில்துறைஅமைச்சர் திரு. எஸ். தொண்டமான், காணி அபிவிருத்தி அமைச்சர் திரு காமினி திசநாயக்கா, கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரி உதவிஅரசாங்க அதிபர் திரு. கே. சுப்பிரமணியம் ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

''ஐம்பதிற்கும் அதிகமான வீடுகளை யானைகள் அழித்துவிட்டன 25 விவசாயிகளின் வயலில் உள்ள பயிர்களையும் இவை நாசம்செய்தும் விட்டன. ஆயிரக்கணக்கான ரூபா பொருட்களும் உடைமைகளும் சேதமாயின 1977-ம் ஆண்டு வன் செயலில் பாதிக்கப்பட்டு மலையகத்தை விட்டு வெளியேறி இங்குவந்து குடியேறிய மலையகமக்களே இங்கு கணிசமாக வசிக்கின்றனர் யானைகளின் தொல்லைகளால் பலர் இக்கிராமத்தை விட்டு வெளியேறியும் உள்ளனர். எனவே இவற்றில் இருந்து பூரண பாதுகாப்பை எமக்கு தாருங்கள் என்றும் திரு. கணேசபிள்ளையால் அம்மகஜரில் கோரப்பட்டுள்ளது.

## முரசுமோட்டையில் வயல் விழா

(கிளிநொச்சி)

முரசுமோட்டையில் எதிர்வரும் 2-ம் திகதி விவசாய உதவிப் பணிப்பாளர் செ. ஜெயரத்தினம் தலைமையில் வயல் விழா நடைபெறவுள்ளது. தொடர்பு கமக்காரர்களான மு. கந்தசாமி, நா. பரராசசிங்கம், ந. செல்லையா என்போரது வயல்களிலே இவ்விழா நடைபெறும்.

விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள், விவசாய பணிப்பாளர்கள், கமநல சேவைப்பகுதியினர் ஆகியோர் கலந்துகொள்ளும் பிரஸ்தாப விழாவிற்கான ஒழுங்குகளை கிளிநொச்சி விவசாய உத்தியோகத்தர் திரு. கே. குமாரசாமி செய்துள்ளார். (அ)

## ரூ. 1000 அபராதம்!

(யாழ்ப்பாணம்)

250 கிறும் மைசூர் பருப்பை கட்டுப்பாடு விலையிலும்பார்க்க கூட்டி விற்றதாக குற்றம் சாட்டி தொடரப்பட்ட வழக்கில் எதிரிக்கு 1000 ரூபா அபராதமும், 5 வருடம் ஒத்திவைக்கப்பட்ட 4 வார சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

இவ்வழக்கு யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் நீதவான் வி. ஜெகசோதி முன்னிலையில் நடைபெற்றது. நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த வர்த்தர் ஒருவர், 250 கிறும் மைசூர் பருப்பை கட்டுப்பாட்டுவிலையிலும் பார்க்க 68 சதம்கூட்டி விற்றதாக இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருந்தது. [மா]

## அஸாம் மாநில பொதுத்தேர்தலில் 500வேட்பாளர்

[புதுடில்லி]

இம்மாதம் 14ம்திகதி நடைபெறவிருக்கும் அஸாம் மாநிலத்தின் 126 தொகுதிகளுக்கான சட்டசபை தேர்தலுக்கும், 12 லோக சபை உறுப்பினர் தெரிவுக்கான தேர்தலுக்கும் மொத்தம் 500க்கு மேற்பட்ட வேட்பாளர் வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.

அஸாம் மாநிலத்தில் எந்தவொரு கட்சியினலும் அரசாங்கம் அமைக்கமுடியாத காரணத்தினல் ராஷ்டிரபதி ஆட்சி நடப்பதும், பொதுத் தேர்தல் வேண்டாம் என்று அஸாம் மாநில கிளர்ச்சியாளர் எதிர்ப்புத்தெரிவித்ததும், வன்முறைகளை மேற் கொண்டுவருவதும் தெரிந்ததே.

தேர்தல்களுக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாக்கப் படுவதாக அஸாம்மாநில ஆளுநர் தெரிவித்தார் [உ]

## பொலிஸ் வலையில் இளம்ஜோடி

(யாழ்ப்பாணம்)

பெற்றோருக்குத் தெரியாமல் சுமார் 42,000 ரூபா நகை. ரொக்கத்துடன் தலைமறைவான காதல்ஜோடி பொலிசாரின் வலையில் சிக்கியதைத் தொடர்ந்து இளைஞர் றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார். யுவதி இரட்சணியசேனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

கன்னலையைச் சேர்ந்த வி. விநோதராஜாவும் மட்டுவிலைச் சேர்ந்த தி. சாந்தலட்சுமியும் நாற்பதினுயிரம் ரூபா நகை, 1800 ரூபா ரொக்கப்பணத்துடன் தலைமறைவாகிவிட்டதாக பொலிஸில் புகார்செய்யப்பட்டதைத் தொடர்ந்து வவனியாவில் வைத்து இவர்கள் பொலிஸாரினல் கைது செய்யப்பட்டனர் பருத்தித்துறை மாஜிஸ்திரேட் முன்னிலையில் இருவரும் ஆஜர் செய்யப்பட்டபோது, இளைஞரை றிமாண்டில் வைக்குமாறும் யுவதியை இரட்சணிய சேனையில் ஒப்படைக்குமாறும் மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார்.

## 20 லட்சம் தொழிலாளர்கள்

லண்டன், ஜன, 30

நைஜீரியாவில் சட்டவிரோதமாக வேலைசெய்துவரும் 20 லட்சம் தொழிலாளர்களை வெளியேற்றுவதென்று அந் நாட்டு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. (வெ)

## சேவைக்குப் பாராட்டு

(கிளிநொச்சி)

தென்இந்திய யாத்திரிகர்கள் விபத்திற்கானபோது அவர்களுக்குவேண்டிய உதவிகளை அளித்த கிளிநொச்சி எம். பி. வி. ஆனந்தசங்கரி, அவரது செயலாளர் திரு. இ. கிருஷ்ணராசா, சமூக சேவையாளர் திரு. அந்தோனிப்பிள்ளை, ஆனந்தபுரம் கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் திரு சூரியமூர்த்தி, ஜேற்ட்டுநிக் கழகத்தலைவர் திரு, அ. குலசேகரம்பிள்ளை, கிளிநொச்சி தொழிலாளர் காங்கிரஸ், காந்திய இயக்கத்தினர், வை. எம். சி. ஏ. இளைஞர் பயிற்சி நிலையத்தினர் ஆகியோரின் சேவைமனப்பான்மையை கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் திரு. கே சுப்பிரமணியமும் மற்றும கிளிநொச்சி மக்களும் வெகுவாகப் பாராட்டினர். (அ)

# சிங்கராயரிடம் வாக்குமூலம் பெறுவதற்கு முயன்றாராம்!

## பொலிஸ் அதிகாரி குறித்து சந்திரகாசன் புகார்

[கொழும்பு]

நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட பின்னரும், வெலிக்கடைச் சிறைச்சாலையில் வைத்து வண. பிதா சிங்கராயரிடம் வாக்குமூலம்பெற பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் முயன்றாராம்.

இச்சம்பவம் குறித்து பொலிஸ்மா அதிபர் திரு ருத்திரா இராஜசிங்கத்திடம் சட்டத்தரணி திரு. ஸி சந்திரகாசன் புகார் ஒன்றைத் தெரிவித்திருக்கிறார்.

வாக்குமூலம் பெறுவதானால் தங்கள் முன்னிலையிலேயே வாக்குமூலம் பெறவேண்டுமென்று உயர்பொலிஸ் அதிகாரியிடம் சிறைச்சாலை அதிகாரிகள் கூறினார்களாம். இதனைத்தொடர்ந்து 'வெருத்தாஸ்' பிலிப்பைஸ்வாஹெலி சம்பந்தமாக சிங்கராயரிடம் பொலிஸ் அதிகாரி விசாரித்ததாகவும் புகார்களில் திரு. சந்திரகாசன் தெரிவித்துள்ளார்.

வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் இவ்வாறு விசாரணை நடாத்துவதை சட்டம் அனுமதிக்கவில்லை யென்றும் திரு. சந்திரகாசன் தெரிவித்திருக்கிறார். (இ)

---

### தலைமன்னார்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பணத்திலேயே 100ரூபா கள்ள நோட்டுக்கள் இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து மன்னார் துறைமுகப்பகுதியில் காணப்பட்ட தரகர்களும் வர்த்தகர்களும் தலைமறைவாகிவிட்டனராம்.

தலைமன்னார் துறைமுகப் பகுதியில் கள்ளநோட்டு புழக்கம் பற்றி தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது. [க]

---

இலட்சியம் நிறைவேற

## "ஒன்றுபட்ட சாத்வீக சக்திவேண்டும்

### 'அமிர்' கருத்து

(பண்டத்தரிப்பு)

"இளைஞர்கள் தங்களுக்கு தாங்களே கட்டுப்பாடுவிதித்து பேரறிஞர் அண்ணா காட்டிய வழியில் நின்று கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பவற்றை கைக்கொண்டு வாழவேண்டும். தண்டு எடுத்து மக்களுக்கு விழிவைத் தேடி இனவிடுதலையை பெற்றுவிட முடியாது. இளைஞர் சக்தி இன்றைய சூழ்நிலையில் எமது மக்களை பாதுகாப்பதற்கு பயன்படவேண்டும். கட்டுப்பாடு மிக்க மக்களின் ஒன்றுபட்ட சாத்வீக சக்தியே எமது இலட்சியத்தை வென்றெடுக்க முடியும்" இவ்வாறு பண்ணாகம் கலைமன்றத்தின் விசேட பொதுக் கூட்டத்தில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையில், எதிர்க்கட்சித்தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணி செயலதிபருமான திரு அ. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

மன்றத்தலைவர் திரு. அம்பழகன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:- "உலகின் யதார்த்த அரசியல் நிலையை நாம் நன்கு புரிந்துகொள்ள வேண்டும். வங்காள தேசம் சுதந்திரத்திற்காக போராடிய போது அங்கு பாகிஸ்தான் இராணுவம் 30 லட்சம் பேரைக் கொன்றுகுவித்தது. முஜிபூர் ரகுமானின் படையினரிடம் சாதாரண ஆயுதங்களே இருந்ததால் வலிமைமிக்க பாகிஸ்தான் இராணுவத்தின் தாக்குதலுக்கு ஈடு கொடுத்து போராட முடியாத இக்கட்டான நிலை ஏற்பட்டது. எதிர்பாராத விதமாக இந்திய இராணுவம் அங்கு குதித்து போராடாவிட்டால் வங்காள தேசம் சுதந்திரப் போராட்டத்தில் வெற்றி பெற்றிருக்க முடியாது. வலிமை மிக்க அரசாங்கத்தின் ஆயுதப்படைகளை எதிர்த்துப் போராடி வெற்றி பெறும் சக்தி இன்று மக்களிடையே இல்லை வெளிநாட்டு அரசின் இராணுவ உதவி இன்றி ஒரு அரசை எதிர்த்து போராடி வெற்றிபெற முடியாது என்பதைஉலக அரசியல் வரலாறுகள் எடுத்துக் கூறுகின்றன. இதனாலேயே இந்திய சுதந்திரப் போராட்டத்தின் போது மகாத்மாகாந்தி அகிம்சை வழியில் நின்று போராடினார்."

பண்டிதர் ப. இராசகுரு உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது: "தமிழர்களாகிய நாம் எமது கலை கலாசாரங்களை பேணிப்பாதுகாத்துக்கொள்ளவேண்டும். எக்காரணம் கொண்டும் அந்நிய கலாசாரங்களை நாம் பின்பற்றக்கூடாது. தமிழன் தன்னைத்தானே ஆளவேண்டுமானால் தமிழன் தமிழனாக வாழவேண்டும். எமது பெருமைமிக்க பண்பாடு, கலாசாரங்களை மறந்து தமிழ் ஈழம் கேட்பதில் அர்த்தமில்லை. இன்று அதிகமான தமிழர்களின் திருமண வைபவங்களில் மாப்பிளை தமிழ் உடைகளான வேட்டி, சட்டை ஆகியவற்றை புறக்கணித்துவிட்டு நீளக் காற்சட்டை அணிந்து இருப்பதை காணக்கூடியதாக இருக்கிறது. இந்த கலாசாரத்திற்கு மாறு மாறுபட்ட நிலையை தமிழ் இளைஞர்கள் பின்பற்றக் கூடாது."

---

## தமிழ் ஈழத்து இலக்கியமும் கைலாசின் சிந்தனையும்

### யாழ். இலக்கியவட்டத்தில் விமர்சனம்

[யாழ்ப்பாணம்]

"தமிழ் ஈழத்து இலக்கியங்கள் அமரர் கைலாசபதியின் சிந்தனைகளை யொட்டியும், வெட்டியும் வளர்ந்திருக்கின்றன. அந்தப் பெருமை கைலாசபதிக்கே உண்டு"

இவ்வாறு யாழ் இலக்கிய வட்டம் பேராசிரியர் க. கைலாசபதி, எழுத்தாளர் தேவன் யாழ்ப்பாணம் ஆகியோரின் மறைவுகுறித்து, யாழ் வீரசிங்கம்மண்டபத்தில் நடத்திய அஞ்சலிக்கூட்டத்தில் உரையாற்றிய யாழ்ப்பாண வளாக தமிழ்த்துறை விரிவுரையாளர் திரு. நா. சுப்பிரமணிய ஐயர் குறிப்பிட்டார். வைபவத்திற்கு, கலைப் பேரரசு ஏ, ரி. பொன்னுத்துரை தலைமைதாங்கினார். திரு நா. சுப்பிரமணியஐயர் தொடர்ந்து உரையாற்றுகையில் "பேராசிரியர் கைலாசபதியை தமிழ்த்துறை பேராசிரியர் என்று கூறுவதிலும் பார்க்க, தமிழ் சோஷலிஸ விஞ்ஞானியென்று கூறுவது தான் பொருந்தும், எமது நாட்டில் உருவாகிய பட்டதாரி ஒருவர் சர்வதேச உலகில் பெருமைக்குரியவராக திகழ்ந்ததென்றால் அது கைலாசபதியைத்தான் சாரும். அந்த இடத்தை இனி வகிக்கக்கூடியவர் இந்த நூற்றாண்டில் கிடையாதென்றார்.

திரு. க. சொக்கலிங்கம் உரையாற்றுகையில், "கைலாசபதியின் பணிகள் நிலையான அத்திபாரத்தில் அமைந்தவை; காலத்தால் அழிக்கமுடியாதவை. ஆனால் அமரர் தேவனோ, தனது காலத்தில் நிலையான பணிகளை செய்திருந்தாலும் அவை சரியானமுறையில் எதிர்காலச் சந்ததியினருக்கு அறியக்கூடிய விதத்தில், கட்டிக்காக்கப் படவில்லை. இதனால் தேவனின் பணி, மறைக்கப்பட்டு விடுமோ என அஞ்சுகிறேன் என்றார்.

திருமதி வள்ளி நாயகி இராமலிங்கம் உரையாற்றுகையில், "தேவனிடம் நிறைந்திருந்த திறமைகளை நான் அவருடன் கூடி உழைத்ததில் நன்கு அறிந்திருக்கின்றேன். அவரிடம் காணும் நகைச் சுவை அறிவை, இனி யாரும் அடைந்திடமுடியாது" என்றார்.

மற்றும் திருவாளர்கள் க. இராசநாயகம், செம்பியன் செல்வன் ஆகியோரும் உரையாற்றினர்.

கவிதாஞ்சலியில் கரைசுந்தரம்பிள்ளை, கல்வயல் குமாரசாமி ஆகியோர் கலந்துகொண்டனர். (வெ)

---

கூடைப்பந்தாட்டம்:

### வெற்றி தோல்வியில்லை

[அரியாலை]

குருநகர் இராணுவ வீரர்களுக்கும், யாழ். பரியோவான் கல்லூரிக்குமிடையே பரியோவான் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கூடைப்பந்தாட்டப்போட்டியில் இருகோஷ்டிகளும் தலா 40: புள்ளிகளைப் பெற்று சமனாகிக்கொண்டன.

---

## நானாட்டானில் 3425 குடும்பங்களுக்கு வரட்சி நிவாரணம்

[மன்னார்]

நானாட்டான் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கடந்த 10 மாத காலத்தில் 3425 விவசாயக் குடும்பங்களுக்குவரட்சி நிவாரணம் வழங்கப்பட்டது.

இவர்களுக்கு வரட்சிநிவாரணமாக 17 லட்சத்து 55 ஆயிரத்து 416 ரூபா பணமும், 10 லட்சத்து 32 ஆயிரத்து 200 ரூபா பெறுமதியான உணவு முத்திரையும், 2 லட்சத்து 2 ஆயிரத்து 624 கிலோ மாவும் வழங்கப்பட்டதுடன் மீன் ரின்களும், பட்டர் ஒயிலும் வழங்கப்பட்டது.

நானாட்டான் உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். அமிர்தலிங்கத்தின் மேற்பார்வையில் நடைபெற்ற இச்சிரமதானப் பணியின்போது வீதிகள் அமைத்தல், நீர்ப்பாசன வாய்க்கால் வெட்டுதல், குளங்கள் செப்பனிடுதல் போன்ற திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. (க)

---

## பருளாய் முருகனுக்கு புதிய தேர்

(சுழிபுரம்)

"முருகன் பவனிவரும் புதியதேரை நாம் விரைவாகச் செய்துமுடிப்பது எமதுகடமையாகும். இப்பணிக்கு உதவ நாம் முன்வரவேண்டும்"

எதிர்க்கட்சித் தலைவர் அ. அமிர்தலிங்கம் சுழிபுரம் பருளை முருகன் ஆலய அலங்காரத் தேர்த் தரிப்புக் கட்டிடத்துக்கான அடிக்கல்லை நாட்டிவைத்துப் பேசுகையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

தேர்த் திருப்பணிச் சபைத் தலைவர் பொறியியலாளர் அ. இராசபட்சம் தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

புதியதேரின் பவளக்கால் நாட்டுதலும் நடைபெற்றது. அடிக்கல்நாட்டுதலும் பவளக்கால் நாட்டுதலும் பூசை வழிபாட்டுடன் ஆரம்பமாகியது.


வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி- 6-15, 9-15
சனி.ஞாயிறு2-30
29-1-83—1-2-83 வரை
அன்னப்பறவை

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சுதாகர் - ராதிகா
கிழக்கே போகும் ரயில் (கலர்

றீகல் (யாழ். நகர்)
கடைசி சில தினங்கள்
எங்க வீட்டுப் பிள்ளை

சாந்தி யாழ்.
தினசரி 5 காட்சிகள்
Robert Shaw-Lee Marvin
AVALANCHE EXPRESS
Action-Thriller-Colorscope

ஸ்ரீதர் (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.
நம் நாடு

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி—மஞ்சுளா
உத்தமன்
(கலர்)

லிடோ (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
கமல்-ஸ்ரீதேவி
பதினாறு வயதினிலே

மனோகரா
(யாழ்நகர்) தினசரி10-30, 2-15, 4-45, 7-00 9-30p.m.
KIRK DOUGLAS in
THE FURY
Color, Adults only

வின்ஸர் தினசரி 4 காட்சிகள்
(யாழ்நகர்)
சிவாஜி வாணிஸ்ரீ பாலாஜி நாகேஷ்
"வசந்தமாளிகை"
(கலர்)
(இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய பிரதி)

ராணி தினசரி 10-00, 2-00, 6-00, 9-30
(யாழ். நகர்) சர்நாடக முதலமைச்சர்
என். டி. ராமராவ், ஜெமினி
சாவித்திரி நடித்த
மாயா பஜார்

ராஜா தினசரி 10-00, 2-00, 6-00,9-30
(யாழ்- நகர்)
சிவாஜி - சாவித்திரி
கர்ணன்
(ஈஸ்ட்மன் கலர்)
இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம்புதிய பிரதி

VACANCY FOR BOOK KEEPERS

Experienced person in bookkeeping & Import Trade for a large Trading organization in Jaffna. Apply with full bio data on or before 10th February 1983. salary negotiable.

MANAGEMENT INFORMATION SERVICE.
68, KANNATHIDDY ROAD,
JAFFNA,
PHONE: 22519. 6058

**Diploma in Radio And Electronic Engineering**

யாழ்ப்பாணத்தில்

முதல்முறையாக அனுபவமும் தகைமையுமுள்ள ஆசிரியர்களால் 6 மாதபயிற்சி அளிக்கப்படவுள்ளது.

வெளிநாட்டு வேலே வாய்ப்புக்களைப் பெறுவதற்கும் சுயமாகத் தொழில் புரிவதற்கும் எமது இளஞ் சந்ததியினருக்கோரரிய வாய்ப்பு.

கட்டணம்: Theory Rs. 750/-
Practicals Rs. 750/-

பயிற்சியின் முடிவில் எம்மால் இலவசமாக வழங்கப்படும் உதிரிப்பாகங்களைக்கொண்டு உதவி யெதுவுமின்றித் தாமாகவே வானொலியொன்றைச் செய்து முடிக்கும் திறமையைப் பெறுவதோடு, சிக்கலான - நுட்பமான எவ்வித பழுதையும் சிரமமின்றித் தாமாகவே கண்டுபிடித்துத் திருத்தும் வல்லமையையும் பெறலாம்.

தேர்வுப் பரீட்சையில் சித்தியெய்தும் முதல் 25 மாணவர்களுக்கு மட்டும் இலவச Theory அளிக்கப்படும்.

தேர்வுப்பரீட்சை - 04-02-1983
விண்ணப்பக்கட்டணம் - ரூபா 2/-

விண்ணப்பப்பத்திரங்களை நேரில் வந்து பதிவுசெய்து பெற்றுக்கொள்ளவேண்டும்.

CANTABIA INSTITUTE

1st Floor, Cantabia Building

21, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 21, Main Street, Jaffna.

தொலைபேசி: 24201

# கமலம் கொலை வழக்கு பிணை மனு: "3வருடம் றிமாண்டிலிருக்கும் 1ம் எதிரிசார்பில் 3வது பிணைமனு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை டியூட்டரி மாணவி கமலம் கொலைவழக்கில், 1-வது எதிரி ராஜனின் பிணைமனு நேற்றுக்காலை யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜே. ஜி. ஆசிர்வாதம் முன்னிலையில் எடுக்கப்பட்டது.

எதிரி சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். பி சபாரட்ணம், 1-ம் எதிரி சார்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் 3-வது பிணைமனு இதுவென்றும், எதிரி தொடர்ந்து சுமார் 3 வருடகாலம் றிமாண்டில் இருந்து வருவதாகவும் கூறினர்,

இவ்வழக்கில், 2-ம் எதிரி, சட்டமா அதிபரின் பணிப்புரையின் பேரில், பருத்தித்துறை நீதவானுல் விடுதலை செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். 1-ம் எதிரியை பிணையில் செல்ல அனுமதிக்குமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

அரசதரப்பில் ஆஜரான அரச சட்டத்தரணி ஐ. ஞானதாசன், கொலைசெய்யப்பட்டவர் ஒரு பாடசாலை மாணவியென்றும், எதிரியை பிணையில் செல்ல அனுமதிக்கக் கூடாதென்றும் பிணைமனுவை பலமாக ஆட்சேபித்தார். எதிரியின் பிணைமனுவை பொலிசாரும் ஆட்சேபித்தனர்.

நீதிபதி விசாரணையை இம்மாதம் 25-ம் திகதிக்கு ஒத்தி வைத்தார். (ஏ)

## முத்துக்குளிப்பை இன்று அமைச்சர் ஆரம்பிப்பார்

[மன்னர்]

சிலாவத்துறை கடலில் முத்துக்குளிக்கும் தொழிலை ஆரம்பித்து வைப்பதற்காக கடல் தொழில் அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேரா இன்று மன்னர் மாவட்டத்திற்கு விஜயம் செய்கிறார்,

இதேவேளை சிலாவத்துறை கடலில் ஆரம்பிக்கப்படவுள்ள முத்துக்குளிக்கும் தொழிலை உடன் நிறுத்திவைக்குமாறு ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன பிரதமர் திரு ஆர். பிரேமதாசா, கடல் தொழில் அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேரா எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் ஆகியோருக்கு மன்னர் மாவட்ட அபிவிருத்திசபை அவசர தந்திஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற மன்னர் மாவட்ட அபிவிருத்திசபை கூட்டத்தின் போதே சிலாவத்துறை கடலில் முத்துக்குளிக்கும் தொழிலை ஆரம்பிப்பதை உடன் நிறுத்துமாறு தீர்மானிக்கப் பட்டு உடனடியாக அவசரத் தந்திகளும் அனுப்பப்பட்டன.

## யாழ். சட்டத்தரணிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் சிலர் அவரது காரைச் சோதனையிடுவதாக கூறிமுறை யற்றவிதத்தில் அவருடன் நடந்துகொண்டனர். இவ்வாறு இராணுவத்தினர் நடந்துகொண்ட துபற்றி யாழ்ப்பாண சட்டத்தரணிகள் சங்கம் கவலையடைந்ததுடன், தனது கடும் ஆட்சேபத்தையும் தெரிவிக்கின்றது'' என்று இத்தீர்மானத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

ஜனதிபதிக்கும் இத்தீர்மானம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அதில் மாவட்ட நீதிபதியிடம் தகாத முறையில் நடந்து கொண்ட வீரர்கள் குறித்து உரிய நடவடிக்கைகளை தாமதம் இன்றி எடுக்க வேண்டுமென்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

பிரதம மந்திரி, பிரதம நீதியரசர். எதிர்க்கட்சித் தலைவர் நீதியமைச்சர், இராணுவ பிரதம தளபதி ஆகியோருக்கும் தீர்மானத்தின் பிரதிகள் அனுப்பிவைக்கப்பட்டன. (கி)

## கிரிக்கெட் டெஸ்ட்: இந்தியா :8-393

இஸ்லாமாபாத், ஜன. 31

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே கராச்சியில் நடைபெற்றுவரும் 6வது இறுதி கிரிக்கெட் டெஸ்ட்டில் இந்தியக்கோஷ்டி முதலாவது இன்னிங்சில் 8 விக்கெட்டுகளை இழந்து 393 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. [வெ]

## புதிய அலுவலகம்

[யாழ்ப்பாணம்]

தமிழீழவிடுதலை அணியின் தலைமை அலுவலகம் கொழும்புத்துறை சுவாமியார் வீதியில் நிறுவப்பட்டுள்ளது. இந்த அலுவலகத்தை தமிழீழ விடுதலை அணியின் தலைவர் டாக்டர் எஸ். ஏ. தர்மலிங்கம் நேற்று திறந்துவைத்தார். [மா]

## யாழ். பல்கலைக்கழக..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சாதாரண சட்டத்தின் கீழ் விசாரணை செய்ய வேண்டும்" என்ற கோரிக்கையை முன்வைத்தே, மாணவர்கள் உண்ணவிரதத்தில் குதித்துள்ளதாக, யாழ். பல்கலைக்கழக மாணவர் அவைத்தலைவர் திரு. ஸ்ரீஸ்கந்தராசா தெரிவித்தார்.

இந்த உண்ணவிரதப் போராட்டம் யாழ் பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்துக்கு முன்பாக நடைபெறுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது (மா

## மாவட்ட அமைச்சர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

'கடந்த 77 தேர்தலின் போது எந்தவித வித்தியாச பேதமின்றி நாம் ஒற்றுமையாகச் செயற்பட்டோம். அந்த ஒற்றுமையைக் கூறுபோடாது கட்டிக்காக்க வேண்டியது தமிழ் மக்களது கடமையும், பொறுப்புமாகும்:

'நாம் மாவட்ட அமைச்சர் பதவிகளை ஏற்றுக் கொள்ளப் போவதாக கூறப்பட்டு வருகிறது. ஆனல் அதுபற்றி எமது இயக்கத்தைப் பொறுத்தமட்டில் எந்த முடிவும் எடுக்கப் படவில்லை. என்னைப் பொறுத்த மட்டில் நான் மாவட்ட அமைச்சர் பதவியையோ அல்லது வேறு எந்தப் பதவியையோ ஏற்றுக் கொள்ள மாட்டேன்' என்ருர்

## மரண அறிவித்தல்

### திருமதி பார்வதி மகோற்கடன்

வட்டுக்கோட்டை மூளாய் வீதியைச் சேர்ந்த பார்வதி அகால மரணமடைந்தார். இவர் டாக்டர் மகோற்கடனின் அன்பு மனைவியும், சட்டத்தரணி மீனம்பிகையின் அருமைத் தாயாருமாவர். ஈமக்கிரிகைகள் 1-2-83 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணியளவில் அன்னரின் இல்லத்தில நடைபெறும். இதனை உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர் 6057

## வாகனங்கள் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ளதுமான, பாவித்த வாகனங்கள் உடன் விற்பனைக்கு

ஒஸ்ரின் மொறிஸ் வான் 27 ஸ்ரீ 1695
இசுசு வான் 22 ஸ்ரீ 8642

விலை விபரங்களை காரியாலயத்தில் அறியலாம்

மகாராஜா இன்வெஸ்ட்மென்ட் லிமிட்.,
122,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். போன்: 24267

## மரண அறிவித்தல்

### கலாநிதி கந்தையா சுந்தரலிங்கம்

B. Sc. (Lond), M Sc. (Lond, P. hd. (TRANSECON) (Lond), AMIT (Lond)]

இன்-போ-மக்ஸ் நிறுவன இயக்குநர் கலாநிதி க. சுந்தரலிங்கம் காலமானுர். இவர் கமலாவதி அவர்களின் அன்புக்கணவரும், ரவிச்சந்திரா (லண்டன்), சந்திரிகா, சித்திரகலா ஆகியோரின் அருமைத்தந்தையும், தம்பித்துரை தம்பதிகளின் அருமை மருகரும், காராளசிங்கம் (ஓய்வுபெற்ற அதிபர் வசாவிளான் ம. ம. வி.), மங்கையற்கரசி, பத்மலிங்கம், குணேஸ்வரி ஆகியோரின் அன்புச்சகோதரரும், தர்மராஜா (கனடா), திருமதி ஜெகநாதன் (ஹொங்கொங்) தவராஜா (நோர்வே) ஆகியோரின் அருமை மைத்துனருமாவார். அன்னரது இறுதியாத்திரை 1983-02-02 புதன்கிழமை பிற்பகல் 3-00மணிக்கு தெல்லிப்பளை, வர்த்தலைவிளானில் உள்ள அன்னரது இல்லத்தில் ஆரம்பமாகி தெல்லிப்பழை கொத்தியாகல் மைதானத்தில் இறுதிக்கிரிகைகள் நடைபெறும். 6055

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் [illegible] 68-ம் இலக்க அச்சகத்தில் 1983-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 1-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 100236/81 Eelanaadu - P. O. Box 49, Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126.